# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 14 ஏப்ரல் - 2001 இதழ் - 4



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபையார்,**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 20030 e-mail : kangayamcofc@eth.net

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத் தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர் களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப் படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/-

*தொடர்பு முகவரி:*

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
**தபால் பெட்டி எண் 27,**
**காங்கயம் - 638 701. இந்தியா**

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | **ஏலகிரி முகாம் அழைப்பிதழ்** | 09 |
| 3. | சுயேட்சை ஊழியர்களும் சபைகளும் | 10 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | வாலிபர் பகுதி | 16 |
| 6. | II.இராஜாக்கள் ஒரு கண்ணோட்டம் | 19 |
| 7. | சிறுவர் பகுதி | 20 |
| 8. | வேதாகமக் கேள்வி- பதில் | 22 |
| 8. | வெளிப்படுத்தின விசேஷம் | 24 |
| 9 | தெரிந்து கொள்ளுங்கள் | 30 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

**Editor**
***S. RAJANAYAGAM***

**Honorary Editor**
***J.C. CHOATE***

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .14 April - 2001 Issue - 4**


*ஆசிரியவுரை*

# பேதுருவிடமிருந்து...

பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களை அலங்கரிக்கும்,அப்போஸ்தலர் களைப் பற்றிப் பேசுவதும், எழுதுவதும் ஓர் அலாதியான காரியம். தேவதாசர்கள் அனைவரும் இவர்களைப் பற்றிப்பேசவும், எழுதவும் பெரிதும் விரும்புவர். அதிலும் பேதுரு, யோவான், பவுல் போன்றவர்களென்றால் கேட்கவே வேண்டாம். ஏனெனில், வெகு விபரமாகச் சொல்லப்பட்டிருக்கும் இவர்கள் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்வதற்கு ஏராளமான காரியங்களுண்டு. ஆகவேதான், பரிசுத்த வேதாகமம் இவர்கள் பற்றியும், இவர்களின் ஆத்தும ஆதாயப்பணி பற்றியும் நமக்கு விரிவாகத் தந்திருக்கிறது. ஆயினும், அப்போஸ்தலர்கள் அனைவர் பற்றியும் நாம் ஒருசேரப் பார்க்க முடியாதாகையால், இப்பொழுது பேதுருவை மாத்திரம் தெரிந்து கொள்வோம்.

ஒரு சமயத்தில் யோவான் ஸ்நானகனுடைய சீஷனாயிருந்தவனும், சத்தமில்லாமல் செயல்படுவதில் சாதுரியவானுமான அந்திரேயா, தன் சகோதரனாகிய பேதுருவை இயேசுவிடம் அழைத்து வந்தான். அப்படி அழைப்பதற்கு முன்பாகவே, அவனை யாரிடத்தில் அழைத்துப் போகிறேன் என்ற '' மாபெரும் உண்மையையும்'' சொல்லிவிட்டான் (யோவா.1:40-42). இங்கே மாபெரும் உண்மை என்று நான் சொல்வதற்குக் காரணம் உண்டு. அந்நாளில் இயேசுவை, மேசியா என்று அடையாளம் காண வேண்டியவர்களே, அடையாளம் காணமுடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த சமயம். ஒரு வேளை கொஞ்சம் அடையாளம் கண்டு கொண்டவர்களும், அங்கீகரிக்கத் தயங்கிக் கொண்டிருந்த நேரம். ஆனால் இந்த அந்திரேயாவோ, தன் சகோதரனிடம், ''மேசியா'' வைக் கண்டோம் என்று தெளிவாக கூறி அழைத்துச் சென்றான்.

அவன் இயேசுவண்டை வந்தவுடன், *''இயேசு அவனைப்பார்த்து; நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்''* (யோவா.1:42)என்றார். பேதுரு என்பதற்கு ''பாறை'' என்று பொருள்படும் என்பது நாமறிந்ததே. தான் தெரிந்து கொண்ட சீடர்களில் நமது பேதுருவின் பெயரைத் தான் அவர்மாற்றியுள்ளார் என்பதையும் நாம் இங்கே கவனிக்கத் தவறக்கூடாது.

பொதுவாகப் பேதுரு என்றாலே, மறுதலித்தவன் என்ற எண்ணமே, அநேகராகிய நமக்கு மேலோங்கி நிற்கும். அத்தோடு அவனுடைய துடுக்குத்தனமும், அவசரமும் சேர்ந்து கொள்ளும். பேதுரு பற்றி, சில நேரங்களில் நாம் அப்படி நினைப்பதற்குச் சரியான முகாந்திரம் இல்லாமலில்லையாதலால், அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால், அதேசமயம் பேதுரு, தேவனுடைய பார்வையில் ஆரம்பம் முதலே ஒரு சிறப்பிடம் பெற்றிருந்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. சில நேரங்களில் அவன் தடுக்கி விழுந்தாலும், உடனடியாக எழுந்து நிற்கும் உயரிய பண்பு கொண்டவன். நம்மைப்போல விழுந்து இடத்திலேயே குப்புறக் கிடக்கும் குணம் கொண்டவன் அல்ல.

சரி, இந்தஅப்போஸ்தலன் பேதுருவை, இயேசுவானவர் பெயர் மாற்றம் செய்து அழைத்தது யோவான் 1:42-ல்.ஏதுமறியாத நிலையில், தன் சகோதரன் பேச்சைக் கேட்டு, இயேசுவண்டை வந்த சீமோன் பேதுரு, தன்னுடைய கூடார வாழ்க்கையின் இறுதி நாட்களில், *'' அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்''* (2.பேதுரு3:13) என்று கூறுகிறார். தரையைக் கூடச் சரியாகப் பார்க்காமல், கடல்நீரையே அதிகமாகக் கண்டுகொண்டு, ஒரு காலத்தில் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்த சீமோன் பேதுரு, இங்கே புதிய வானத்தைப் பற்றியும், புதிய பூமியைப் பற்றியும் பேசுகிறாரே, அதுஎப்படி? இந்த உன்னத நிலை அவனுக்கு எப்படி வந்தது? கண்டிப்பாக இது ஒரு இரவிலோ அல்லது ஒரு நாளிலோ வந்திருக்க முடியாது. படிப்படியாகத் தான் அந்த உயரிய நிலையை அவன் அடைந்திருக்க வேண்டும்.அப்படித்தானே.

நாமனைவரும் கூட நம்முடைய வாழ்க்கையின் இறுதி நாட்களில் புதிய வானமும், புதிய பூமியும் நமக்காகக் காத்திருக்கிறதென்று சொல்ல ஆசைப்படுவோம். ஆனால், வெறுமனே ஆசைப்படுவதால் மாத்திரம் அது நமக்காகக் காத்துக்கொண்டிருந்து விடாது. நாமும், பேதுரு போல் பல போராட்டங்களைச் சந்திக்க வேண்டும்.ஒருவேளை, நம்முடைய போராட்டத்தில் நாம் தோற்றுப் போனாலும்,பேதுரு போல எழுந்து நிற்க வேண்டும். பேதுரு போல தேவனை நோக்கி, ஒவ்வொரு கட்டத்திலும், வளர்ந்து முன்னேறிக்கொண்டே செல்லவேண்டும். அப்பொழுது நமக்கும் புதிய வானமும், புதிய பூமியும் காத்துக்கொண்டிருக்கும்.

சரி பேதுரு எந்தெந்த கட்டங்களில், தேவனை நோக்கி வளர்ந்தான் என்று இப்பொழுது பார்த்துப் பயனடைவோம்.

## I. வளர்ச்சியின் முதல்படி (மாற்கு 1:16-18)

சீமோன் பேதுருவின் வளர்ச்சி அவன் அழைக்கப்பட்ட நாளிலேயே ஆரம்பமாகிவிட்டதென்று சொன்னால் அது மிகையாது.

இயேசுவானவரால் அழைக்கப்பட்டபோது, அவன் நிலை எப்படியிருந் திருக்குமென்று எண்ணிப்பாருங்கள்.அவனுக்குச் சொத்தாக இரண்டு காரியங்கள் தான் இருந்திருக்க முடியும். ஒன்று, இல்லாமை, அடுத்தது கல்லாமை.ஆம், பெத்சாயிதா ஊரை சேர்ந்த எவரும் கல்வி கற்றவரல்ல. மற்றும், மீன்பிடி தொழிலை மையமாகக் கொண்ட யாரும் வசதியானவர்களுமல்ல. அவன் கண்டது கடலும், கடற்கரையும்; அவன் கொண்டது படகும், வலையும்; அவன் அறிந்தது மீன்பிடித்தலும், வலையை பழுது பார்த்தலும் ; அவ்வளவுதான்.

ஆனால், இப்படிப்பட்ட பின்னணியில் இருந்தாலும், இயேசுவானவர் அழைத்தவுடன் அவருக்குப் பின்னாக உடனடியாகச் செல்ல முடிவெடுத்தது, நமக்குச் சில செய்திகளைச் சொல்லுகிறது. ஆம், அழைக்கப்பட்ட அந்த நாளிலேயே தன்னுடைய வாழ்க்கைக்குப் புது அர்த்தம் கற்பிக்கத் தொடங்கி விட்டான் பேதுரு. கடலுக்குச் செல்வதும், மீன்களைப் பிடிப்பதும், விற்று வருமானம் ஈட்டுவதும், குடும்பத்தைப்பேணுவதும், வலைகளைப் பின்னுவதும் தான், வாழ்க்கையென்று உழன்று கொண்டிருந்தவன், தான் அழைக்கப்பட்ட நாளில், தன்னுடைய வாழ்க்கையை முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் காண ஆரம்பித்தான். கிடைத்த அழைப்பைத் தான் தேவனிடம் நெருங்கிச் சேர்வதற்கான பெரும் வாய்ப்பாகக் கருதினான். ஆகவே, அந்த அழைப்பை, அவரை நோக்கி முன்னேறுவதற்கான முதற்படியாக்கிக் கொண்டான்.

வெறும் சீமோனாக இருந்தவன், ''பேதுரு'' என்ற பெயருக்குண்டான முழு அர்த்தத்தோடு, ஜொலிக்கும் மாணிக்கமாகப் பின்னாளில் திகழ்ந்ததற்கு காரணம், அவன் அழைக்கப்பட்ட நாளில் தன்னை அழைத்தவரைப் பற்றிப் பெற்றுக்கொண்ட சரியானதொரு கண்ணோட்டம் தான். இந்தக் கண்ணோட்டம் தான், அவனுடைய இறுதி நாளில், ''புதிய வானம் பற்றியும், புதிய பூமி பற்றியும்'' பேசுவதற்கு ஆதாரமாக அமைந்தது.

அருமையானவர்களே, நாமும் நம்முடைய வாழ்வில் இயேவைக் கண்டிருக்கிறோம். ஒருவேளை, பேதுரு போல நேரிடையாகக் காணாவிட்டாலும் வேதத்தின் வாயிலாகவும், போதிக்கிறவர்களின் வாய்வழியாகவும் கண்டிருக்கிறோம். பேதுரு போல, நேரிடையாக அழைக்கப்படாவிட்டாலும், சுவிசேஷத்தினாலே அழைக்கப்பட்டிருக்கிறோம் (2.தெச.2:14) அப்படியானால் அவரை பற்றிய நம்முடைய கண்ணோட்டம் எப்படியுள்ளது? ஒருவேளை மேசியாவாகிய இயேசுவைக் கண்டு கொள்ளும்வரை, பேதுருவைப்போல், நமக்குத் தெரிந்ததே உலகமென்றும், நாம் நடத்துவது தான் வாழ்க்கையென்றும்

எண்ணிக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால், வாழ்க்கையென்பது, வயிற்றுப் பிழைப்புக்காக மாத்திரம் வாழ்வதல்ல,மாறாக உயரிய நோக்கம் கொண்டதென்று, கல்லாதவனாகிய பேதுரு, இந்த இல்லாதவனாகிய பேதுரு நமக்குக் கற்றுக்கொடுக்கிறார்.

ஆம், இந்த பூமிக்குண்டான வாழ்க்கை, வெந்ததைத் தின்று, விதிவந்தால் சாவோம் என்பதல்ல. தேவன் நம்மை இதற்காக இப்பூமியில் படைக்கவில்லை. என்றும் அழியாத, நித்தியமானதொரு ஆத்துமாவை நம்மில் படைத்திருப்பதும் இதற்காக அல்ல. அப்போஸ்தலன் பவுல் சொல்லும் போது, இது ஒருதெய்வீக அழைப்பு என்று கூறுகிறார். (எபே.4:1) எவ்வளவு தான் செல்வமும், செல்வாக்கும் இருந்தாலும், அது நமக்கு வாழ்க்கையாகாது (லூக்.12:15). இந்த அடிப்படை உண்மையை இயேசுவைக் கண்டுகொண்ட ஒவ்வொருவரும் , இயேசுவின் சுவிசேஷத்தால் அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும். பேதுரு, இந்த உண்மையைத் தெரிந்துகொண்டபடியால் தான், எல்லாவற்றையும் விட்டு, இயேசுவை உடனடியாகப் பின்பற்ற முடிந்தது.

ஆகவே,அன்பானவர்களே புதிய வானமும், புதிய பூமியும் நமக்காகவும் காத்துக்கொண்டிருக்க வேண்டுமானால், நாமும் பேதுரு போல, தேவனிடமாய் வளரவேண்டும். தேவனை நோக்கி முன்னேற வேண்டும். அதற்கு நாம் செய்யவேண்டிய முழு முதற்காரியம், பேதுரு போல,மேசியாவைப் பற்றிய சரியான கண்ணோட்டத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பெற்றுக் கொள்வோமாக!

## II. வளர்ச்சியின் இரண்டாம்படி (மத்.16:13-19)

சீமோன் பேதுருவுடைய வளர்ச்சியின் இரண்டாம் படியாக, இயேசுவின் ஒரு கேள்விக்கு அவன் அளித்த பதிலை ஆதாரமாக நாம் காட்டலாம். (16:16)

அப்போஸ்தலன் பேதுரு பற்றி இருக்கும் வேறொரு பரவலான அபிப்ராயம்,அவர் உணர்வுப் பூர்வமானவரென்பது.அவ்ருடைய அவசர குணம் அவருக்கு இப்படியொரு பெயரைப் பெற்றுதந்துள்ளது. ஆனால், அவர் உணர்வு பூர்வமானவர் மாத்திரமல்ல, அவர் அறிவுப்பூர்வமானவரும் கூட. கீழ்வரும் சம்பவம் அதை உறுதி செய்கிறது.

நமதாண்டவர் ஒரு சமயம், பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று பிரசங்கித்து விட்டு, பிலிப்பு செசரியாவின் திசைகளில் வருகிறார். அங்கே தன்னுடைய சீஷர்களிடம் இரண்டு கேள்விகளை எழுப்பினார். முதலாவது, மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று நினைக்கிறார்கள் என்பது. அடுத்து,நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்பது. இங்கே கவனியுங்கள். முதல் கேள்விக்கு, சீஷர்களில்

பலர் பதில் சொல்லியிருக்கிறார்கள்.ஆகவே தான், வசனம்14, ''அவர்கள்'' என்று சொல்லுகிறது. ஆனால், இரண்டாம் கேள்விக்கு பேதுரு மாத்திரமே பதில் சொல்லியுள்ளார். ஆம்,***''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து''*** என்றான் (16:16). இதிலிருந்து என்ன தெரிகிறது? இயேசுவோடு கூட சுற்றித்திரிந்து, உண்டு, உறங்கி, அவர் வல்லமையான வார்த்தைகளைக் கேட்டு, அவரின் செய்கைகளின் அற்புதங்களைக் கண்ட ஏனைய சீஷர்கள் புரிந்து கொள்ளாத ஒரு உண்மையை இந்தக் கல்லாதவன் கனகச்சிதமாகப் புரிந்து வைத்திருந்தான்.

இவனின் இந்த பதிலுக்கு பின் தான்,இயேசு அவனைப் பார்த்து, யோனாவின் குமாரனாகிய சீமோனே, ''நீ பாக்கியவான்'' என்று கூறினார். தன் தொழிலையும், தன் ஊரையும் விட்டு, உடனடியாக அவரைப் பின்பற்றி வந்தபொழுது, இயேசு அவனைப் ''பாக்கியவான்'' என்று சொல்லாமல், அவரைப் பின்பற்றி வந்தவன், எதைக் கற்றுக் கொள்ளவேண்டுமோ அதை கற்றுக்கொண்டபிறகு தான், அவனைப் ''பாக்கியவான்'' என்று சொல்லுகிறார். இதிலிருந்து, அவரைப் பின்பற்றினால் மாத்திரம் போதாது, அவர் பற்றி அறிந்து கொள்ளவேண்டிய அளவுக்கு அறிந்துகொள்வது அத்தியாவசியமானது என்று அறுதியிட்டுச் சொல்லுகிறார்.

எனக்கன்பானவர்களே, இன்றைய கிறிஸ்தவத்தில், இல்லாமலிருப் பவைகளின் பட்டியலில் முதலிடம் வகிக்க முற்றிலும் தகுதியானது, தேவ காரியங்களைப் பற்றிய அறிவுக்குறைவு தான். ஆம், தேவனைப் பற்றியும், அவரின் தன்மை பற்றியும், அவரின் இரட்சிப்பின் திட்டம் பற்றியும், அவர்தம் குமாரன் பற்றியும், அவரின் தியாகம் பற்றியும், அவர் சிந்தின இரத்தம் பற்றியும், அந்த இரத்தத்தை விலையாகக் கொடுத்து வாங்கப்பட்ட சபை பற்றியும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிற மக்கள், தெரிந்துகொள்ள வேண்டிய அளவுக்கு தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். இந்நிலை, மார்க்க சீரழிவுக்கானதொரு அறிகுறி. இந்த உண்மையை,இப்படி நான் நேரிடையாகச் சொல்வதால், வாசகர்கள் யாரும் வருத்தப்படவேண்டாம். நாம் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், இது தான் யதார்த்த நிலை.ஆகவே, இதிலிருந்து விடுபடுவதற்கான கடும் முயற்சியில், இன்றைய கிறிஸ்தவம் உடனடியாக இறங்க வேண்டும். இல்லையேல், அதற்கு விலையாக, நித்திய ஜீவனைக் கொடுக்க வேண்டி வரும்.

அவரை அறிந்து கொள்வதிலே, பின்பற்ற முடிவெடுக்கிற விஷயத்திலே, பேதுரு போல நம் எல்லோருக்குமே வெற்றி தான். ஆனால், அவரை அறிந்து கொள்கிற விஷயத்திலே, நாம் பேதுருபோல வெற்றியடைந்திருக்கிறோமா? சொல்லுங்கள். தேவனைப் பற்றிய அறிவு, அவர் குமாரனாகிய இயேசுவைப்பற்றிய

அறிவு, பரிசுத்த ஆவியானவர் தந்த வேத வசனங்களைப் பற்றிய அறிவு நமக்கில்லாவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா? ஒரு சமயம், சதுசேயர் இயேசுவைச் சோதித்த பொழுது அவர் சொன்னதைக் கவனியுங்கள். '' நீங்கள் வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்'' (மத்.22:29)என்று. தப்பான எண்ணம், பாவத்திற்கு வழிநடத்தும், பாவம் ஆத்துமாவை விலையாகக் கேட்கும். அந்த விலையைக் கொடுக்கத் துணிந்தால், நித்திய ஆக்கினை பரிசாகக் கிடைக்கும். எப்படி?

தன்னைப் பின்பற்றித் தன்னோடிருப்பவர்கள், தன்னைச் சரியாக அறிந்திருக்க வேண்டுமென்று விரும்பித் தான், ''நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்'' என்று கேட்டார். பேதுருவிடமிருந்து பதில் வந்தபோது, அவர், ''நீங்கள்'' பாக்கியவான்கள் என்று சொல்லாமல், ''நீ'' பாக்கியவான் என்று சொன்னார்.இந்தப் பாக்கியமான நிலைதான், பின்னாளில், புதிய வானத்துக்காகவும்

புதிய பூமிக்காகவும் காத்திருக்கச் செய்தது, ஆகவே, நாமும், வேத அறிவினடிப்படையில், அறிய வேண்டிய அனைத்தையும் அறிந்து, பாக்கியமான நிலையைப் பெறுவோமானால், பேதுருவுக்கு காத்திருந்த புதிய வானமும், புதிய பூமியும் நமக்கும் காத்திருக்கும்.

## III.வளர்ச்சியின் மூன்றாம்படி (யோவான் 21:1-17)

சீமோன் பேதுருவின் வளர்ச்சிக்கான மூன்றாம்படியாக, திபேரியாக் கடற்கரையில் பேதுருவுக்கு ஏற்பட்ட, அந்த தர்ம சங்கடமான சூழ்நிலையைச் சொல்லலாம்.

ஆம், அங்கே, பாக்கியவான் என்று இயேசுவால் மெச்சப்பட்ட பேதுரு, தன்னுடைய பரலோக பயணத்தில், தடுக்கி விழுந்தபடியால், இயேசுவின் மீது அவன் கொண்ட அன்பு மீண்டும் சோதிக்கப்பட்டு, உறுதி செய்யப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. இச்சம்பவம், பேதுருவுக்கு இனிப்பான அல்லது இன்பமான ஒன்றல்ல. தலைக்குனிவை ஏற்படுத்திய வேதனையான நிகழ்ச்சி. சக சீஷர்களுக்கு முன்பாக, பாக்கியவான் என்று பாராட்டப்பட்டு, அவர்கள் முன்பாக தலை நிமிர்ந்து நின்றவன், இச்சந்தர்ப்பத்தில் அதே சீஷர்களுக்கு முன்பாக, தலை தாழ்ந்து நின்றான். பாவம்! ஆனால், என்ன செய்வது, விதைத்ததை அறுத்துத் தானே ஆக வேண்டும்.

தன்னுடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, திரும்பவும் மீன்பிடிக்கச் சென்று விட்ட சீடர்களுக்குத் தன்னுடைய வல்லமையை மீண்டும் ஒரு முறை நிரூபித்துக் காட்டினார். இது சீஷர்களுக்கான மூன்றாவது தரிசனம் (யோவான் 21:14). '' அவர்கள் போஜனம் பண்ணின பின்பு, இயேசு, சீமோன் பேதுருவை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில்

அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன், ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர், என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்'' (21:15). இப்படி அவர் மூன்று தரம் கேட்டார். அவர், மூன்றாம் முறை கேட்டபோது, பேதுரு ***''துக்கப்பட்டான்''*** என்று வசனம் (17) கூறுகிறது. அப்படியானால், பேதுருவை துக்கப்படுத்த வேண்டுமென்பது கிறிஸ்துவின் நோக்கமா? இல்லை. மாறாக, தன் மீது அவன் கொண்ட அன்பை, மூன்று முறை மறுதலித்தபடியால், அந்த அன்பை இங்கே மூன்று முறை உறுதி செய்யட்டும் என்று எதிர்பார்த்துள்ளார். அவ்வளவுதான்.

இயேசுவின் இந்த அணுகுமுறை, பேதுருவுக்கு மிகுந்த மனவேதனையைக் கொடுத்திருந்தாலும், அவன் ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொண்டான். தான் இதுகாறும், இயேசுவின் மீது காட்டின அன்பு, அந்த மறுதலிப்பின் மூலம் அர்த்தமில்லாமல் போய்விட்டதென்று தெரிந்து கொண்டான். இனிக்காட்டும் அன்பு, இன்னும், ஆழமானதாக, நிலையானதாக இருக்கவேண்டுமென்று அறிந்து கொண்டான். அதுதான் இயேசுவின் எதிர்பார்ப்பு என்பதைப் புரிந்து கொண்டான்.

இயேசுவின் உரையாடலில் வேறொரு முக்கியமானதொரு காரியத்தை யும் நாம் கவனிக்கத் தவறக்கூடாது. அந்திரேயாவால், பேதுரு அழைத்து வரப்பட்ட போது ''இயேசு அவனைப் பார்த்து; நீ யோனாவின் குமாரனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார். கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம் (யோவான்.1:42) சீமோனாக இருந்தவன் இயேசுவால், ''பேதுரு'' என்று மாற்றப்பட்டிருந்தான். ஆனால், அதே பேதுருவைப் பார்த்து இயேசு ''சீமோனே'' என்று மூன்று முறை அழைத்தார். ஏன், என்ன காரணம்? இயேசுவுக்கு மறதி அதிகமா? என்ன தான் காரணம்?

கவனியுங்கள், பேதுரு என்பதற்குப் ''பாறை'' என்று பொருள் - பாறை உறுதியானது. அந்தப் பாதையைப் போன்று உறுதியுள்ளவனாக நீ இருப்பாய் என்று உன்னிடத்தில் எதிர்பார்த்தேன்.ஆனால், நீயோ என்னை மறுத்தலித்தாய். இனி நீ பேதுரு என்றழைக்கப்படுவதற்கு லாயக்கற்றவன் என்று அவனுக்கு உணர்த்தும்படியாகவே, அவனைச் சீமோனே என்றழைத்தார். கண்டிப்பாக மறதி காரணமல்ல.

ஒரு வேளை பேதுரு, துக்கப்பட்டிருந்தாலும், தன் வாழ்க்கையில் முன்னெப்போதும் கற்றுக்கொள்ளாத ஒரு முக்கியமான பாடத்தை அப்பொழுது கற்றுக் கொண்டான்.அந்தப்பாடம், ***''உண்மையான அன்பு''*** பற்றியது. ஆம், பேதுரு, இதுவரை இயேசுவின் மீது காட்டாததொரு அன்பு அது.இயேசு பேதுருவுக்கு எடுத்துக்காட்ட முயன்ற இப்படிப்பட்ட அன்பு பற்றிதான், அப்போஸ்தலன் பவுல் 1.கொரி.13-ம் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். இந்த அன்பை பேதுரு உணர்ந்தபின்,தன் பெலவீனங்கள் எல்லாம் மாறி, கிட்டத்தட்ட ஒரு

பூரணத்தைத் தன் வாழ்க்கையில் பெற்றுக்கொண்டான். உன்னத தேவனுக்குப் பயன்படும் பக்குவமான கருவியாக மாறினான்.அவருக்காக தைரியமாகவும், உண்மை யாகவும், உறுதியாகவும் ஊழியம் செய்தான்.

அருமையானவர்களே, அப்போஸ்தலன் பேதுரு , புதிய வானமும்,புதிய பூமியும் காத்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லும் நிலையை அடைந்தது தற்செயலாக ஏற்பட்ட ஒன்றல்ல. அந்த நிலையை அடைவதற்கு, அவன் கடந்து வந்த பாதை கடினமானது. பாடுகளும், சோதனைகளும், வேதனைகளும் நிறைந்தது. ஆனால், அவை எல்லாவற்றையும் தாண்டி வெற்றி கொண்டான்.

பேதுரு பற்றி வாசிக்கிற அன்பான நண்பரே! சகோதரனே, சகோதரியே, நாமும் இந்தப் பேதுரு போல், தேவனை நோக்கி, முன்னேறிச் செல்வோம். ஒவ்வொரு படியாக முன்னேறிச் செல்வோம். ஆம், உலகமே பெரிதென்றும், பூமியின் வாழ்க்கை தான் பெரிதென்றும் நினைக்காமல், இயேசுவின் சுவிசேஷத்தைப் பின்பற்றுவோம். குறிப்பாக, நமக்காக வந்த இயேசுவின் சுவிசேஷம் பற்றியும், அவைகூறும் இரட்சிப்பின் திட்டம் பற்றியும், அவர் கட்டின ஒரே சபை பற்றியும் அறிந்து கொள்வோம். அதன்பிறகு, என்ன நேர்ந்தாலும், சொல்லிலும், செயலிலும் அவரை விட்டுப் பின்வாங்காத உறுதித் தன்மையை, நாம் அவர் மீது காட்டும் மெய்யான அன்பின் மூலமாகப் பெற்றுக்கொள்வோம். அப்படி செய்வோமானால், பேதுரு போல, நாமும், '' அவருடைய வாக்குத்தத்தத்தின் படியே நீதி வாசமாயிருக்கும், புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்க முடியும்''.

*தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்*

**E.Z.S. ராஜ நாயகம்**

## புதியதொரு வாய்ப்பு

*திருமறை ஆசான் மாத இதழில் திங்கள் தோறும் வெளிவந்த, சகோ.J.C.சோட் (Bro.J.C.CHOATE) அவர்கள் எளிய நடையில் எழுதிய 26 கட்டுரைகளை தொகுத்து **"நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி"** என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டுள்ளோம்.*

*சத்திய விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக்கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்பவேண்டிய தொகை ரூ.20/- மாத்திரமே.*

*முகவரி : தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
*தபால் பெட்டி எண்.27, காங்கேயம் - 638 701.*

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!

# வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

**இடம் : YMCA** வளாகம், ஏலகிரி மலை (வேலூர் மாவட்டம்)

(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.

ஜோலார்பேட்டை ஜங்ஷனிலிருந்து, சுமார் 25 கி.மீ.

திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ)

**நாள் : மே மாதம் : 2,3,4 - 2001 (புதன் - வெள்ளி)**

**சிறப்பம்சங்கள்**

★ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க அருமையான சந்தர்ப்பம்.

★ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தரும் தேவ தாசர்கள்

★ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.

★ கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்பவெப்பம்

★ குடும்பத்துடன் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை.

★ பெண்களுக்கு தனி இட வசதி உண்டு.

உணவும் தங்குமிடமும் இலவசம்

பதிவுக் கட்டணம் ரூ.75.00 மட்டுமே

தொடர்பு முகவரி : கிறிஸ்துவின் சபை

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

Ph : 04257 - 20030

e-mail : kangayam cofc @ eth.net

குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரம் தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.

# சுயேட்சை ஊழியர்களும் சபைகளும்

உலகில் இன்று அநேக ஊழியர்களும், சபைகளும் உள்ளன. இவைகளில் பெரும்பான்மையோர் நாமகரன கூட்டத்தார். வேறு அநேகர் தங்களை சுயேட்சை ஊழியர் என்று அழைத்து கொள்கிறார்கள். இப்படி அவர்கள் குறிப்பிடுவதன் பொருள் என்ன? எந்த ஒரு நாமகரண கூட்டத்தையும் அவர்கள் சார்ந்திருக்கவில்லை என்பது அவர்களின் கூற்று. இவர்கள் ஏதோ ஒரு காரணத்தினால் தங்களின் இஷ்டப்பட்ட வழியில் செல்லுவதை தெரிந்து கொள்கின்றனர்.

நாமகரண கூட்டங்களிடையே, உபதேசக் கோட்பாடுகளில் பிரச்சனைகள் எழும்புவதினாலும், தனிநபர் மோதல்களினாலும், ஒரு புதிய ஊழியத்தைத் துவக்கும்படி ஏதுவாகிறது. சிலவேளைகளில் நாமகரணக் கூட்டத்தாரின் போதனைகள் மற்றும் கைகொள்ளும் முறைகளிலிருந்து தங்களை விலக்கிக் கொள்ள சிலபேர் சுயேட்சை ஊழியர்களாவதும் உண்டு. தாங்கள் வசூலிக்கும் பணத்திற்கு கணக்கு கொடுக்க வேண்டிய கட்டாயம் வருவதாலும், தன் ஊழியத்தை ஸ்தாபித்துக் கொண்டு, அதை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டு, அதிலிருந்து தனக்கு உலக ஆதாயத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் சிலர் சுயேட்சைகளாக மாறுவதுண்டு.

இந்தியாவிலே அநேகம் பேர் தங்களை சுயேட்சை ஊழியர் என்றும் ஊழியம் என்றும் அழைத்துக் கொள்கின்றனர். ஒவ்வொருவரும் தான் முழுநேர ஊழியராக இருக்கவும், ஒவ்வொரு முழுநேர ஊழியரும் தனக்கென ஒரு கூட்ட மக்களை கொண்டிருக்கவும் விரும்புகின்றனர். மற்ற ஊழியர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதை மிகவும் கடினமானதாக எண்ணுகின்றனர். அநேக வேளையில் அவர்கள் பணத்திற்காக வேலை செய்யும் கூலியாட்களாயிருப்பார்கள். ''கிறிஸ்தவத்தில்'' மட்டும் இப்படிப்பட்ட சூழலில்லை. பிற மதங்களில் இந்நிலை இருந்து கொண்டுள்ளது. இந்தியாவில் தன்னையே ''குரு'' வாக்கிக்கொள்கின்ற அநேகரைக் குறித்து சிந்தித்து பாருங்கள். உங்களைச் சுற்றிலுமிருக்கிற ''பாபா''க்களைப் பாருங்கள். எப்போதுமே தன்னை பின்பற்றுவதற்கென்று ஒரு கூட்ட மக்களை தன்வசப்படுத்த யாராவது ஒருவர் எழும்பிக் கொண்டே இருக்கின்றனர். மனிதன் மிக எளிதாக வஞ்சிக்கப்படுகிறான் அல்லது வஞ்சிக்கப்பட விரும்புகிறான். வேதாகமத்தில் சுயேட்சை ஊழியரைக் குறித்தோ சபையைக் குறித்தோ நாம் வாசிக்கிறதில்லை என்று பார்ப்பின் அது ஒருவேளை உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். தேவனுடைய வசனத்தில் நாம் எந்த ஒரு நாமகரணக் கூட்டத்தைக் குறித்தும் வாசிப்பதில்லை. பிரிவினைகளை உண்டாக்கினவர்களைக் குறித்தும், அப்படிப்பட்டவர்களை விட்டு நாம் விலக

வேண்டும் என்பது குறித்தும் நாம் வாசிக்கிறோம். (ரோமர் 16:17,18). அதே போல கள்ள போதகர்களைக் குறித்தும், கள்ளத் தீர்க்கத்தரிசிகளைக் குறித்தும், கூலிக்காக ஊழியம் செய்யும் ஆட்களை குறித்தும் வேதத்தில் நாம் வாசிக்கிறோம். அவர்கள் ஆக்கினைப்பிடியிலே நிற்கின்றனர்.(2.பேதுரு.2:1;1யோவா.4:1; யோவா. 10:12,12).

பவுலோ, பேதுருவோ மற்றெந்த ஊழியர்களோ வேதாகம ஆசிரியர்களோ இந்த சுயேட்சைகளைக் குறித்து எதுவும் பேசினதுமில்லை. விளக்கிக் கூறினதுமில்லை. அவர்கள் யாருக்கும் எதிராக செயல்படவில்லை. ஒருவருக் கொருவர் எதிராக ஊழியம் செய்யவுமில்லை, அல்லது போட்டி மனப்பான்மையும் இருந்ததில்லை. மாறாக அவர்கள் ஒன்றாக சேர்ந்து ஊழியம் செய்யவும், ஒற்றுமையாக மகிழ்ச்சிகளை அனுபவிக்கவும், பாடுகளையும் ஒன்றாக அனுபவிக்கவும் போன்ற காரியங்களிலே ஈடுபட்டனர் (அப்.2;அப்:8:11; கொரி.12:26).

பேதுருவுக்கென்று ஒரு சபையும் பவுலுக்கென்று மற்றொரு சபையும், யோவானுக்கு பிரிதொரு சபையும், யாக்கோபுக்கு என வேறு ஒரு சபையும் இருந்ததாக நாம் தேவனுடைய வசனத்தில் வாசிப்பதில்லை. அப்போஸ்தலர்களோ சபை அங்கத்தினர்களோ தங்களுக்கென்று ஒரு சபை இருந்ததாக குறிப்பிடுவதில்லை. நாம் கர்த்தருடைய சபையைக் குறித்து மட்டுமே வாசிக்கிறோம். (மத்.16:18;எபே.5:23). வசனங்களினூடே நாம் செல்லுகையில், ஒரே ஒரு சபையைக் குறித்து மாத்திரமே குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண இயலும். (எபே.4:4; கொலே.1:18)இது கிறிஸ்துவின் சபை. அது அநேக பிராந்திய சபைகளையும், அநேக அங்கத்தினர்களை அவை உள்ளடக்கியிருப்பதையும் அறிகிறோம். ஆளுகை அமைப்பைப் பொறுத்தமட்டில், சுயாட்சி முறையையும் அதே வேளையில் ஒன்றுக்கொன்று எதிராக ஒன்று ஊழியஞ் செய்யவோ, எதிர்க்கவோ தனது சுயேட்சையை பயன்படுத்துவதில்லை. மாறாக அவைகள் அந்நியோந்நியத்துடன், ஐக்கியத்துடன், ஒற்றுமையாக ஊழியஞ்செய்து கர்த்தருக்கடுத்த காரியத்தில் ஆர்வம் காட்டின.

தனிநபர் ஒருவர் சுயேட்சையாக இருப்பது என்பது அல்லது ஒரு பிராந்திய சபை சுயேட்சையாக இயங்குவது என்பதன் பொருள். கர்த்தருக்கும் அவருடைய சபைக்கும் மேலாக உங்களை உயர்த்தி சுயேட்சையாக இருக்கவே விரும்புகிறீர்கள். ஆதலால் நீங்கள் கர்த்தருக்கும் அவருடைய சபைக்கும் எதிராக ஒரு போட்டியாளராக திகழுகிறீர்கள்.அதாவது அவரோடு நீங்கள் இருப்பதற்கு பதில் அவருக்கு எதிராக நீங்கள் செயல்பட்டு, அவருக்காக இருப்பதை விடுத்து, அவரது காரியங்களை எதிர்க்க கூடியவராயிருப்பீர்கள் (மத்.12:30). இதை தான் நீங்கள் விரும்புகிறீர்களா? உங்கள் வாழ்க்கையிலே இதுதான் உங்கள் ஊழியமா? நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைக் குறித்து வினயமாக சிந்தித்து உங்களை நீங்கள் சரி செய்து கொள்வது அவசியமானது.

நீங்கள் சுயேட்சையாக இருக்க விரும்பினால், தேவன் உங்களில் ஆர்வம் காட்டுவதில்லை. சுயேட்சைகள் எல்லாம் கிறிஸ்தவர்களல்ல, கிறிஸ்தவர்களெல்லாரும் சுயேட்சைகள் என்பதுதான் உண்மை. நீங்கள் மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சபையை எதிர்க்கக் கூடியவராயிருப்பின், இன்னொரு சபையை உருவாக்கி அவர்கள் கூட்டத்தின் (மறைமுகமாக) நீங்களும் சேர்ந்து கொள்ளாமல், கர்த்தருடைய சபையில் ஒரு அங்கமாயிருங்கள். பிரசங்கம் செய்ய நீங்கள் விரும்பினால், பிரசங்கியுங்கள், ஆனால் சத்தியத்தை மாத்திரம். (2.தீமோ.4:2) உங்கள் சுய விருப்பத்தின்படி சொல்ல உங்களுக்கு யாரும் அதிகாரமளிக்கவில்லை. அதன் மூலம் ஒரு மார்க்க அமைப்பை உருவாக்கி அதிலே ஜனங்களை அங்கமாக்கவும் அதிகாரமளிக்கவில்லை. அது சுயேட்சையாக இருக்கலாம். அவ்வளவுதான். இதன் விளைவு நீங்கள் இழந்து போனவராகவும் உங்களை பின்பற்றுகிறவர்களும் இழந்து போனவர்களாகவுமே காணப்படுவீர்கள்.

நீங்கள் வேதத்திற்கு திரும்பி, புதிய ஏற்பாட்டின் தூய்மையான கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். தேவன் மீது விசுவாசம் வைத்து, பாவங்களிலிருந்து திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, உங்கள் பாவங்களுக்காக ஞானஸ்நானம் பண்ணப்படுங்கள் (மாற்கு 16:15,16; அப்.2:38).அப்பொழுது கர்த்தர் உங்களை இரட்சித்து தமது சபையிலே சேர்த்துக்கொள்வார். (அப்.2:47,20:48) இது உங்களை ஒரு நாமகரண கூட்டத்தானாக்காமல், உங்களை கிறிஸ்தவனாக மட்டும் மாற்றுகிறது. (1.பேதுரு.4:16). இதற்குப் பிறகு வேதத்தை பிரசங்கியுங்கள், போதியுங்கள். நீங்கள் அவருக்கு கீழ்ப்படிந்தது போலவே அவர்களையும் கீழ்படிய உற்சாகமளியுங்கள். அப்பொழுது மாத்திரமே நீங்கள் சரியானவராக இருக்க முடியும். அப்பொழுது மாத்திரமே நீங்கள் விடுதலை பெற்றவராவீர்கள். (யோவான். 8:32)

**J.C.Choate** **J.C. சோட்**

## *கிறிஸ்தவராக மாற...*

| | |
|---|---|
| 1. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேள்விப்படுங்கள் | ரோமர் 10:17 |
| 2. தேவன், கிறிஸ்து மீது விசுவாசம் கொள்ளுங்கள் | யோவான் 8:24 |
| 3. பாவத்திலிருந்து மனந்திரும்புங்கள் | லூக்கா 13:3 |
| 4. கிறிஸ்துவை தேவசுதன் என்று அறிக்கையிடுங்கள் | அப்.8:37 |
| 5. திரு முழுக்குப் பெறுங்கள் | தீத்து 3:5 |

பெண்கள் பகுதி

# ஆராதனையில் பெண்கள் ''அந்நிய பாஷையில்'' பேசலாமா?

சென்ற மாதத் தொடர்ச்சி

கிங் ஜேம்ஸ் மொழியாக்க வேதாகமத்தில் ''அந்நிய பாஷை'' என்கிற பதம் இடம் பெற்றிருப்பதால், 1.கொரிந்தியர் 14-ம் அதிகாரம் பெந்தெகொஸ்தே மக்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாக உள்ளது. ''அந்நிய பாஷை'' என்பதை பரலோக மொழி என்றும், தேவன் மாத்திரமே இதைப் புரிந்துகொள்ளமுடியும் என்றும், தாங்கள் பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலேயே இதைப் பேசுகிறோம் என்றும் சொல்லுகிறார்கள். இது உண்மையா? இந்த வசனப்பகுதியை நாம் உற்று நோக்கினால், போதிக்கப்படும் தெளிவான காரியங்களுக்கு, அவர்களின் உபதேசமும், கிரியையும் முற்றிலும் முரண்பட்டதாக இருப்பதைக் காணலாம்.

1. இவ்வதிகாரத்தின் 40வது வசனத்தில் பார்ப்போமானால் பரிசுத்த ஆவியானவர், அப்போஸ்தலன் பவுலிடத்தில் ஏவும் போது ***''சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது''*** என்றார். பெந்தெகொஸ்தே கூட்டங்கள், கைதட்டுதலுக்கும், ஒழுங்கின்மைக்கும், அந்நிய பாஷையில் பேசவும், பரிசுத்த ஆவியானவரால் திடீர் என்று அசைக்கப்பட்டோம் என்று சொல்லிக்கொண்டு அடிக்கடி அலறுதலுக்கும் பேர்போனது. பரிசுத்த ஆவியானவர் தான் எழுதிய 1.கொரி. 14:40 வசனத்திற்கு நேர் விரோதமாக, இன்று மக்கள் செயல்பட காரணமாயிருக்கமாட்டார்.

2. இந்த வசனப்பகுதியின் மையத்தில்,தீர்க்கதரிசனத்தைக் குறித்தும் அந்நிய பாஷை பேசுதல் குறித்தும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது.சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும் படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை;அவர் அமர்ந்திருக்கவேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்று கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்ககடவர்கள் ; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே.(1.கொரி.14:34,35)

✱ பெந்தெகொஸ்தே குழுக்கள் பெண் பிரசங்கிமார்களுக்குப் பெயர் போனது, அதுமாத்திரமல்ல அவர்களுடைய கூடுகையில் ஆண்களைக் காட்டிலும் அதிகப்பெண்களே ''அந்நிய பாஷை'' பேச அதிக ஆர்வமாய் முற்படுகிறார்கள். தாங்கள் செய்கிற காரியத்தின்மேல் கட்டுப்பாடு இல்லாதவர்களைப் போல, பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும் மாத்திரமல்ல, அவரின் கட்டுப்பாட்டினாலும் இக்காரியத்தை செய்வதாக சொல்லிக்கொள்கிறார்கள். ஆனாலும், 32-ம் வசனம், ஒருவனின் சொந்த விருப்பத்திற்கு மாறாக, பரிசுத்த ஆவியானவர் அவனை ஆட்கொண்டு பேசச்செய்யமாட்டார் எனத் தெளிவாய்ச் சொல்கிறது. ஆகவே இந்த மக்கள் தாங்கள் இப்படிப் பேசவேண்டும் என்று விரும்புவதால் இப்படிப்

பேசுகிறார்கள் என்று தெரிகிறது. அவர்கள் சொல்லுவதும், செய்வதும் பரிசுத்த ஆவியானவரால் எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கும் இந்த தெளிவான வார்த்தைக்கு நேர்விரோதமானதாகும். இந்த உண்மையிலிருந்தே, அவர்களை பேசச் சொல்லித் தூண்டுவது பரிசுத்த ஆவியானவரல்ல என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

3. ''தேவன் கலகத்திற்கு தேவனல்ல'' என்று வசனம் 33 கூறுகிறது. 29-32 ஆகிய வசனங்கள், தீர்க்கதரிசனம் உரைக்கிறவர்கள் (போதிக்கும்போது அல்லது பிரசங்கிக்கும் போது) குழப்பம் வராதபடிக்கு ஒவ்வொருவராக பேசவேண்டுமென போதிக்கிறது. பெந்தெகொஸ்தே சபைகளில் பொதுவாக இருப்பதைப்போல், பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தலை பெற்றுக்கொண்டோம் என்று சொல்லிக்கொண்டு, ஒரு சாரார் குதித்துக்கொண்டிருப்பர்.அவர்களை அந்நிய பாஷை பேசுகிறோம் என்பவர்கள், தங்களின் செயலால் குறுக்கீடு செய்து கொண்டிருப்பர். ஆவியின் பெயரால் இவர்கள் போடும் ஆட்டங்களை, பரிசுத்த ஆவியானவர் தாமே, தமது வசனத்தில் தடைசெய்திருக்கிறார்.

4. 9,10,11 ம் வசனங்களில் ''பாஷை'' என்பது மனிதர்கள் பேசும் மொழிகள் என்று தெளிவாய் அடையாளம் காட்டுகிறது. 9-ம்வசனத்தில் பவுல், ''அதுபோல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித்தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே என்ற கேள்வியைக் கேட்கிறார். இன்றைக்கு ''அந்நிய பாஷை'' பேசுகிறோம் என்பவர்களிடம் நாமும் இதே கேள்வியை கேட்கவேண்டும்.

5. 10 வது வசனம், உலகில் அநேக மொழி இருப்பதாகவும் (பரலோக பாஷையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை என்பதை கவனியுங்கள்) அவைகள் அர்த்தம் கொண்டதாக இருப்பதாகவும் கூறுகிறது.

6. வசனம் 11-ல் பேசப்படுகிற மொழி, தனக்குத் புரியவில்லை என்றால் அதை பேசுகிறவர் தனக்கும், தான் அவருக்கும் அந்நியராகவே இருப்பதாக பவுல் கூறுகிறார். உலகில் உள்ள பலவகையான மொழிகளை நாம் பார்க்கும்போது பவுல் சொல்லுகிற இவை அனைத்துமே அர்த்தமுள்ளவைகளாயிருக்கிறது.

7. சபைக்கு பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக அவர்கள் இருக்கவேண்டு மென்பது பவுலின் முடிவாக இருக்கிறது (வச.12) வசனம் 19-ல் நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும் என்கிறார் பவுல். அக்காலத்திலே பவுலை இப்படி தெளிவான வார்த்தைகளை எழுதும்படியாக வழி நடத்தின பரிசுத்த ஆவியானவர், யாருக்கும் விளங்காத குழப்பத்தை விளைவிக்கிற அந்நியபாஷை பேசுதலுக்கு காரணமா யிருப்பார் என்று ஒருவர் எப்படிச் சொல்லக்கூடும்.1. கொரிந்தியர் 14-ம் அதிகாரத்தில் உண்மையில் பவுல் எப்படிப்பட்ட சூழ்நிலைகளைக் குறித்து விவாதிக்கிறார்?

✱ அப். 2-ம் அதிகாரத்திற்கு நாம் போகும்போது, இயேசு அப்.1:5-ல் வாக்குத்தத்தம் செய்த பரிசுத்த ஆவியானவரால் அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் எனக் காண்கிறோம். இந்த ஆவியின் ஞானஸ்நானம் அவர்களை எல்லாவித அற்புதங்களை செய்யும்படி பெலப்படுத்தியது. அற்புத ஞானமும், அறிவை உணர்த்தும் வசனமும், தாங்கள் படித்திராத பல மொழிகளில் பேசுவதும், வியாதியஸ்தர்களை குணப்படுத்தும் வல்லமையும் அருளப்பட்டது. அப்போஸ்தலரிடத்திற்கு கொண்டுவரப்பட்ட எல்லாரும் குணமானார்கள் என்று அப் 5:16 கூறுகிறது. ***"விசுவாச குணமளிப்போர்"*** என்று இன்றைக்கு அழைத்துக்கொள்பவர்கள் தங்கள் தோல்விக்கு குணம் பெறுபவரிடம் விசுவாமில்லை என்று சாக்குச் சொல்வதுபோல, அன்றைக்கு சொல்லவேண்டிய நிலை எழவில்லை. அப்போஸ்தலர்களுடைய அற்புதங்கள் உடனடியானதாகவும், முழுமையுடையதாகவும் இருந்தது.இன்றைக்கு சொல்லுவது போல் ***"கொஞ்சம் பரவாயில்லை"*** என்பதெல்லாம் அன்றைக்கு இல்லை.

அப் 5:32 கீழ்ப்படிகிற யாவருக்கும் பரிசுத்த ஆவியானவர் அருளப் பட்டதாக கூறினாலும் அன்றைக்கு அற்புதங்கள் செய்யக்கூடியவர்கள் அப்போஸ் தலர்கள் மாத்திரமே ஆயிரக்கணக்கானவர்கள் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவர்கள் ஆனார்கள். ஆனாலும் வசனம் 12 "அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங் களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது" என்றே சொல்கிறது.

✱ அப்போஸ்தலர்கள் சில கிறிஸ்தவர்களை தேர்ந்தெடுத்து (ஏற்கனவே பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருந்தவர்கள் அப் 6:3) கைகளை வைத்து, குறிப்பிட்ட வரங்களை தரும் வரைக்கும் அப்போஸ்தலர்களைத் தவிர வேறொருவரும் அற்புதங்கள் செய்யவில்லை. இவர்கள் அப்போஸ்தலர்கள் செய்யும் எல்லா காரியத்தையும் செய்ய முடியாது. ஒருவர் ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் வல்லமையுடையவராயிருப்பார். மற்றொருவர் வேறு மொழி பேசுவார், மற்றொருவர் வியாதிப்பட்டவரை குணமாக்குவார், வேறொருவர் அற்புத ஞானத்தைக் கொண்டிருப்பார். வித்தியாசமான மொழி பேசுபவர்கள் சபையில் இருப்பதால், ஒருவர் மொழி பெயர்க்கும் திறன் கொண்டவராயிருப்பார். மற்றொருவர் தீர்க்கதரிசன வரமுடையவராயிருப்பார். இப்படி இன்னும் பற்பல.

**B. B. சோட்** **R. R. நாயகம்.**



வாலிபர் பகுதி

# இரண்டற கலந்திருக்கட்டும்

இயற்கையின் எழில்மிகு தோற்றத்திற்கு பேர்சிறந்த நைல் நதியை தன் ஊடே ஓடப்பெற்ற எகிப்தில் சற்றொப்ப நானூறு வருடம் அடிமையாக பிற ஜன சேவை ஆற்றியபடியால் நாடி நரம்புகளெல்லாம் நலிவடைந்து, நானிலம் அனைத்தையும் நாவில் பிறந்த நல்வார்த்தையில் நற்சீருடன் சிருஷ்டித்த நீதிபரனை நோக்கிச் செய்த முறையீட்டால் அடிமை நுகம் நீக்கப்பட்டு, விடுதலைக் களிப்புடன் கானான் தேசத்தை சுதந்தரிக்க சுத்தரால் வழிநடத்தப்பட்டபோது, யோர்தானைக் கடந்து, நினைவுக்கல் எடுத்த நிகழ்விலிருந்து **''அன்பு''** , **''ஜெபம்''** என்ற இரண்டு கற்கள் நம்முடன் கடந்த இரு திங்களாக தித்திப்பான சம்பாஷணை செய்ததென்று நம்புகிறேன்.

சீறிப்பாய்ந்து வந்த சிங்கத்தின் வாயை சிரமமின்றி கிழித்துச் சிதைத்துப் போட்ட சிங்காரமான சங்கீதப்பாடகன் தாவீது ***''பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டாரென்று அறியுங்கள்''*** (சங்.4:3) என்ற உண்மைதனை ஊக்கமாக உறுதியிட்டு விளம்புகிறான். அண்ட சராசரங்களையும் தன் அநந்த ஞானத்தால் படைத்தெடுத்த பரமனிடமிருந்து ஞானத்தை வரமாகப் பெற்ற சாலமோன், நீதிமொழிகளில் ***''கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்''*** என்றும் ***''கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று''*** என்றும் (நீதி1:7;14:27) யாத்துக் கொடுத்திருக்கிறார். வாலிபர்களாகிய நீங்கள் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்படவேண்டுமென்றும் ஞானத்தையும், ஜீவ ஊற்றையும் அடைந்துகொள்ள வேண்டுமென்றுமெண்ணி ''பயமும்'' ''பக்தியும்'' இரண்டற கலந்திருக்கிற ''பயபக்தி'' என்னும் கல்லை இம்முறை செதுக்க எத்தனித்தெழுதுகிறேன்.

## பயபக்தி என்னும் கல்

மனிதனின் மனது இயல்பாகவே பக்தியுடன் பயத்தையும் சேர்த்து காரியங்களை எடுத்துரைத்தால் தான் செவிமடுப்பேன் என்கிற குணமுடையதாய் இருக்கிறது. உதாரணமாக, '' வீட்டிற்கொரு விருச்சம் வளர்ப்போம்'' என்று குரல்கம்மக் கத்தினாலும் மரம் வளர்த்தால் மழை பொழிந்து மண் செழிப்படைய வாய்ப்புண்டு. சூரியக்கதிர்கள் நேரடியாக பூமியைத் தாக்கி பூமியின் வெப்பம் அதிகரிப்பதைக் குறைக்க வாய்ப்புண்டு என்ற கருத்துக்களை பிறர் கவனம் கவர கரிசனையாய் எடுத்துரைத்தாலும் காது கொடுத்துக் கேட்பாரில்லை. ஆனால் மரம் வளர்க்காவிடில் கதிரவனின் கதிர்க்கரங்கள் அகிலத்தை அதிகமாய் தாக்குவதால் தென், வட துருவங்களில் உறைந்திருக்கும் பனிப்படலங்கள் வெப்பத்தால் உருகி கடல்நீர் மட்டம் அதிகரிப்பதால் இப்பொழுது இருக்கின்ற நிலப்பரப்பு மூன்றில் ஒரு பங்கு சமுத்திரத்திற்கு கீழ் போய்விடும் ஆபத்து அருகிலிருக்கிறது என்று சொல்லும் போதுதான் மரம் வளர்ப்பதால் வரும் பயனையே எண்ணிப் பார்க்க மனித மனத்திற்கு யோசனை வருகிறது.

சர்வ ஞானம் படைத்த தேவன் இதையெல்லாம் அறிந்ததால்தானோ மனிதன் பயத்தையும் பக்தியையும் இரண்டற கலந்து தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பி தன் கட்டளைக்கு செவிமடுத்து கீழ்ப்படிந்தால் கிடைக்கும் நன்மையை பட்டியலிடுவதோடு நிறுத்தாமல் கீழ்ப்படியாவிட்டால் வந்து சேரும் தீமையையும் பட்டியலிடுவதை மோசேயால் எழுதப்பட்ட உபாகம புத்தகத்தின் 28-ம் அத்தியாயத்தை வாசித்தால் வாலிபர்களாகிய நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

''பயபக்தி'' என்கிற பதத்தைக் கேட்டவுடன் அடியேனின் சிறுமதிக்கெட்டுவ தெல்லாம் முற்பிதாவாகிய ஈசாக்கின் பெயர்தான். ஈசாக்கின் இரட்டைப் புதல்வர்களில் ஒருவனான யாக்கோபு தன் மாமனுடன் விவாதிக்கையில் ***''என் பிதாவின் தேவனாகிய ஆபிராகமின் தேவனும், ஈசாக்கின் பயபக்திக்குரியவரும் என்னோடிராமற்போனால்''*** (ஆதி.31:42) என்கிறார். யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கைக் குறித்து மொழிவதைக் கவனித்தீர்களா? ஒருவேளை வாலிபர்களாகிய நீங்கள் ஈசாக்கை அறிந்திருப்பதைக் காட்டிலும் விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாமை அதிகமாய் அறிந்திருப்போம். ஆனால் யாக்கோபோ தன் தகப்பனாகிய ஈசாக்குக்கு கூடுதலான ஒரு அடைமொழியாகிய ''பயபக்திக்குரிய''என்ற சொல்லை பயன்படுத்துகிறார். யாக்கோபு இப்படிச் செய்ததற்கு காரணமுமுண்டு.

ஆதியிலே ஆதாமைப் படைக்கும் பொழுது மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று ஏற்ற துணையை, அதிசயதேவன் உண்டாக்குகையில் ஏவாள் என்ற ஒரே ஸ்திரீயைத்தான் உண்டாக்கினார். ஆனால் அதற்குப் பின்பு வந்த மனிதர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களை விவாகம் செய்தபோது தேவன் ஏனோ அமைதலாய் இருந்து விட்டார். ஈசாக்கின் தகப்பனாகிய ஆபிரகாம் கூட தன் வேலைக்காரியாகிய ஆகாரை சந்ததி உண்டாக்குவதற்கென்று பயன்படுத்தினார். யாக்கோபும் கூட தன் தாத்தாவின் வழியில் நடந்தான். ஆனால், ஈசாக்கோ தேவனின் ஆதித்திட்டத்தை அறிந்தவனாய் அவர்மேல் பக்தியும், அதோடு கூட தெய்வபயமும் நிரம்பப்பெற்றிருந்ததினால் தன் மனைவியாகிய ரெபேக்காளின் மீது மாத்திரம் அன்பு செலுத்தினான். அவன் இப்படி தேவனுக்குப் பயந்து காரியங்களை செய்ததால் தான் யாக்கோபு தன் தகப்பனைக் குறித்து சொல்லும் போது ''பயபக்தி'' என்ற அடைமொழியை பயன்படுத்துகிறார்.

இஸ்ரவேலின் இனிமையான சங்கீதப் பாடகன் இயம்புகையில் ***''கர்த்தருக்குப் பயந்து அவர் வழியில் நடப்பவன் பாக்கியவான்''*** (சங்.112:1) என்கிறார். வாலிபர்களாகிய நாம் இவ்வசனத்தைக் கவனித்தால் பயமும், அவர் வழியில் நடந்து என்ற பக்தியும் கலந்து இருப்பதை அறியலாம். ஈசாக்கு இவ்வழியிலே நடந்ததால் பின்வருகிற சந்ததிக்கு எடுத்துக்காட்டாகவும் அதைவிட மேலாக கர்த்தருடைய பார்வையில் பாக்கியவானாகவும் திகழ்ந்தான். வாலிபர் களாகிய நாமும் இவ்வழி நடந்திடல் வேண்டுமென்பதை அறிதல் நன்று.

ஆதவனுக்கு கீழ் நடக்கும் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்த பிரசங்கி காரியத்தின் முடிவை தனது நூலில் கூறுகையில்***''.... தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே''***

(12:13) என்கிறார். இவ்வசனத்திலும் நாம் உற்று நோக்கினால், பயமும், அவர் கற்பனைகளைக் கைக்கொள் என்கிற பக்தியும் நம்மிடம் இருந்திடல் வேண்டும் என்பதை நாம் அறியலாம். ஆகவே அன்று யோர்தான் என்னும் நதியைக் கடந்த போது நினைவுக்கல் சுமந்து சென்று சுதந்தர தேசத்தில் நட்டதுபோல் நாமும் இவ்வாழ்க்கை நதியை கடந்து பரலோகம் என்னும் சுதந்திர தேசத்தில் சேர *"பயபக்தி"* என்னும் கல் சுமப்போம்.

தேவனுக்கு உகந்த விண்ணப்பம் செய்த சாலமோன் விளம்புகையில், ***"கர்த்தருக்கு பயப்படுகிறதினால் மனுஷர் தீமையைவிட்டு விலகுவார்கள்"*** (நீதி.16:6) என்கிறார். வாலிபர்களாகிய நம் முன் இவ்வசனத்திற்கு சிறந்த நடைமுறை உதாரணமாக யாக்கோபின் அலாதி பிரியத்தைப் பெற்ற யோசேப்பு நிமிர்ந்தெழுந்து நிற்கிறான். எகிப்தில் அடிமையாக விற்கப்பட்டவன், ஆண்டவர் தன்னோடிருந்தபடியினால் போத்திபார் என்னும் மனிதனின் வீட்டில் விசாரணைக் காரனானான். எஜமானின் மனைவி தன்னைத் தகாத உறவுக்கு அழைத்த போது, யோசேப்பு சொன்ன மறுமொழி அவனின் நற்குணத்தை விண்ணெட்டும் படி வளரச் செய்கிறது. ***"... இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வதெப்படி என்றான்"*** (ஆதி.39:9) யோசேப்பிடம் சிறந்திளங்கிய இந்த தெய்வபயம் அவனை தீமையை விட்டு விலகச் செய்தது. அவன் தன் எஜமானுக்கு பயந்து இக்காரியத்தில் உடன்பட மறுத்திருக்கலாம் என்று கூட சிலர் நினைப்பர். ஆனால், இந்தத் தொல்லை தன் எஜமானியிடமிருந்து நித்தம் வந்திருக்கிறது. அப்படி யோசேப்பு எஜமானுக்கு முதல் தரம் பயந்திருந்தால், அடுத்த முறை இச்சிற்றின்பம் தன்னை நோக்கி இச்சக வலை விரித்தபோது பயம் நீங்கி படுபாதாளத்தில் விழுந்திருப்பான் என்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. ஆனால், யோசேப்பு தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யக்கூடாது என்பதில் உறுதிகாட்டினபடியால் இத்தீமையிலிருந்து தீவிரமாய் விலகி ஓடினான். ஆகையால் எனக்கன்பான வாலிப உள்ளங்களே! இப்பிராயத்திலேயே தேவனுக்கு பயந்து தீமையை விட்டு தீவிரமாய் ஓடுவோம். யோசேப்பை உயர்த்தின தேவன் உங்களோடும் இருப்பார்.

நமது அன்பின் ஆண்டவரைக் குறித்து எபிரேய ஆசிரியர் எழுதுவதை கவனியுங்கள், "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு" (எபி.5:7) நமது ஆண்டவர் நாம் அளந்து பார்த்த முதல் கல்லான "அன்பே" உருவானவர். "ஜெபம்" என்கிற இரண்டாம் கல் அவரிடம் அதிகமாயிருந்தது, ஆனால் அவர் கேட்கப்பட்டது அவரிடம் இரண்டற கலந்து காணப்பட்ட "பயபக்தி" என்கிற மூன்றாவது கல் இருந்ததால் தான். ஆகவே எனக்கன்பான வாலிபர்களே! நாம் கண்ட இம்மூன்று கற்களையும் நிரம்பப்பெற்றுக்கொள்வோம்! தேவ ஆசீர்வாதம் பெறுவோம்! ஆமென்.

ஜே. பிக்கின்ஸ்.

# II. இராஜாக்கள் ஒரு கண்ணோட்டம்

**1. காலம்** : ஏறக்குறைய கி.மு. 562-536 வருடங்களுக்குள்ளாக எழுதப்பட்டிருக்கலாம்.

**2. ஆசிரியர்** : எரேமியாவாக இருக்கலாம் என்று யூதர்களால் நம்பப்படுகிறது.

**3. இந்நூல் பற்றி** :

அ) I&II இராஜாக்களின் நூல் ஏறக்குறைய 400 வருட, எபிரேய வரலாற்றுச் சம்பவங்களை தனக்குள்ளடக்கியிருக்கிறது.

ஆ) இந்நூலில் கி.மு. 536 ஆம் ஆண்டு பெர்சிய ராஜாவாகிய கோரேஸ், இஸ்ரவேலர்களை விடுதலை செய்த நிகழ்வு இடம்பெறவில்லை.

இ) பத்து கோத்திரத்தைக் கொண்ட இஸ்ரவேல் ராஜ்யத்தில் ஒரு நீதியுள்ள அரசன் கூட இல்லை.

ஈ) இரண்டு கோத்திரத்தைக் கொண்ட யூதா ராஜ்யத்தில் சுமார் என்று சொல்லும் அளவுக்கு எட்டு ராஜாக்கள் இருந்தார்கள்.

உ) எரேமியா கி.மு.562-ல் விடுதலை செய்யப்பட்டார் (2.இராஜா.25:27)

ஊ) எல்லா இராஜாக்களின் அறிமுகத்திலும், ஒரே மாதிரி பின்பற்றப் பட்டிருக்கிறது.

a. ஒரு அறிமுகம் (ஒரே மாதிரியான வகையில்) தரப்படுகிறது.

b. அரசனின் வாழ்க்கையிலும், அரசாட்சியிலும் குறிப்பிடத்தக்க சம்பவம் கூறப்பட்டிருக்கிறது.

c. அரசனின் ஆட்சி குறித்த தீர்ப்பு தேவ பார்வையில் வழங்கப்படுகிறது.

d. ஒரு முடிவுரை (ஒரே மாதிரியான வகையில்) தரப்படுகிறது.

**4. இந்நூலின் செய்தி:**

a. பல பெண்கள் திருமணம், வரும் சந்ததி மீது பயங்கர விளைவுகளை கொண்டு வருகிறது.

b. பாவ மன்னிப்பு என்பது, பாவத்தின் விளைவிலிருந்து விடுதலை என்று பொருள் தராது.

சிறுவர்பகுதி

# நட்சத்திரங்களும், கிரகங்களும் – யார், ஏன், எப்போது உண்டாக்கப்பட்டது?

அருமையான குட்டித்தம்பி, தங்கைகளே! திருமறை ஆசான் மாத இதழில் முதன்முறையாக உங்களைச் சந்திப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. நாம் கண்ணில் காண்கிற எல்லாம், எண்ணற்ற ஆண்டுகளுக்கு முன் நடந்த அர்த்தமற்ற நிகழ்வல்ல என்பதை இச்சிறு பிராயத்திலேயே அறிந்திருக்க வேண்டுமென்பதால், சிருஷ்டிப்பைக் குறித்து எனது முதல் பகுதியில் எழுத ஆசைப்பட்டு எழுதியுள்ளேன்.

நாம் இரவு நேரங்களில் வானத்தை நோக்கும் போது, நாம் கண்பவை நமக்கு வியப்பாக இருக்கிறதல்லவா? விஞ்ஞானிகள் நாம் தொலைநோக்கியை பயன்படுத்தாமலே ஐயாயிரம் நட்சத்திரங்களையும், ஐந்து அல்லது ஆறு கிரகங்களையும் மற்றும் நிலாவையும் காணமுடியும் என்று சொல்லுகிறார்கள். இப்பிரபஞ்சத்தில் பல கோடிக்கணக்கான நட்சத்திரக் குடும்பங்கள் காணப்படுகிறது. ஒவ்வொரு நட்சத்திரக் குடும்பத்திலும் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் இருக்கின்றன.

ஆனால், இவை எல்லாவற்றையும் யார் சிருஷ்டித்தது? இவை எப்பொழுது சிருஷ்டிக்கப்பட்டது? மற்றும் ஏன்? வேதாகமம் யாத்.20:11-ல் தேவன் இவ்வுலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் சிருஷ்டித்தார் என்று போதிக்கிறது. ஆதி.1:14,19ல் இன்னும் விவரமாக நாம் படிக்கலாம். ''பின்பு தேவன், பகலுக்கும், இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாக்கக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும், நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்ககடவது என்றார். அவைகள் பூமியின் மேல் பிரகாசிக்கும்படிக்கு, வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்களாயிருக்கக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. தேவன் இரண்டு பெரும் சுடரை உண்டாக்கினார். இரவையாள சிறிய சுடரையும், பகலை ஆளப் பெரிய சுடரையும் படைத்தார். தேவன் நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். பகலையும் இரவையும் ஆளவும் வெளிச்சத்துக்கும், இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும் தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாயவிரிவிலே வைத்தார்''.

வேதாகமம், நமக்கு மேலும், தேவன் ஆறு நாட்களில் இவைகளை படைத்தார் என்கிறது. ஆனால் சூரியன், சந்திரன் மற்றும் வான் மண்டலங்களில் உள்ள மற்றவைகளை அவர் நான்காம் நாளில் சிருஷ்டித்தார் (ஆதி.1:19). இப்பொழுது இவைகளை யார் படைத்தார்? எப்பொழுது படைத்தார் என தெரிந்து கொண்டோம். ஆனால் இன்னும் சந்திரன், சூரியன் போன்ற கிரகங்களை எதற்காக படைத்தார் என்று தெரிந்து கொள்வோம்.

முதலாவதாக, சூரியன் பகலுக்கும் ,இரவுக்கும் வித்தியாசம் காண உதவுகிறது.

இரண்டாவதாக, வான மண்டலங்களில் உள்ளவைகள், பூமயின் காலங்களையும் நேரங்களையும் வித்தியாசப்படுத்த உதவுகிறது. (ஆதி.1:14-18)

முன்றாவதாக, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் பூமிக்கு ஒளிதரக்கூடியதாக இருக்கிறது.

நான்காவதாக, இவைகள் கடற்பிரயாணம் செய்வதற்கு பேராதரவாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மாலுமிகள், நட்சத்திரங்களை தங்களின் சமுத்திர மற்றும் கடற்பிராயணங்களில் பயன்படுத்தி இருக்கிறார்கள். நட்சத்திரங்களில் நிலையை பயன்படுத்தி (இவற்றில் சில வேதாகமத்தில் இடம் பெற்றிருக்கிறது யோபு. 9:1; 38:31; ஆமோஸ்.5:8) மாலுமிகள் புவியை சுற்றி வருவார்கள். அவர்கள், எங்கே இருக்கிறார்கள் என்றும்,எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள் என்றும் இவைகளைக் கொண்டே அறிவார்கள். வானத்தில் நட்சத்திரம் ஒரே நிலையில் தான் இருக்கும். மாறாக கிரகங்கள் நகரக்கூடியதாகக் காணப்படும். உண்மையில்**''கிரகம்'' (Planets)** என்ற வார்த்தை**''சஞ்சரிப்பவன்'' (Wanderer)** என்ற அர்த்தம் தரக்கூடிய கிரேக்க பதத்திலிருந்து வந்தது.

ஐந்தாவதாக, இரவு நேர வானத்தில் நாம் காணும் நட்சத்திரங்களும், கிரகங்களும் தேவனை அவர்களுடைய (நம்முடைய) சிருஷ்டிகராக கனப்படுத்தவும், மரியாதை செலுத்தவும் காரணமாக இருக்கிறது.(சங்.19:1) வசந்த கால இரவில் , நாம் வானத்தை பார்த்து நட்சத்திரங்களை சுட்டிக்காட்டி**''இது என் பரமபிதா படைத்தார்''** என்று நண்பர்களுக்கு சொல்லலாம். அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் போது ''சூரியனுடைய மகிமை வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விஷேசித்திருக்கிறது என்று கூறியுள்ளார்.'' (1.கொரி.15:41) ஆயிரக்கணக்கான நட்சத்திர குடும்பங்களையும் நட்சத்திரங்களையும் சிருஷ்டித்து, அவைகளை நிலைநிறுத்தி ஒவ்வொன்றும் மற்றொன்றிலிருந்து வேறுபடுத்தி இருக்கிற இத்தனை மகத்தான தேவனை நாம் நேசித்து சேவிக்கிறோம் என்பதை எண்ணிப்பாருங்கள். உதாரணமாக கிரகங்களில், ''வியாழன்'' கிரகமே, மிகப் பெரியது. (74,130 மைல் சுற்றளவு) நாம் வாழும் பூமியானது ஐந்தாவது பெரிய கிரகம்.(7930 மைல் சுற்றளவு) புளுட்டோ மிகச்சிறிய கிரகம் (1440 மைல் சுற்றளவு கொண்டது).

ஆகவே, இப்பொழுது கிரகங்களையும், நட்சத்திரங்களையும் யார் சிருஷ்டித்தது என்ற கேள்விக்கு, தேவன் சிருஷ்டித்தார் என்று அறிந்தோம்.எப்பொழுதென்ற கேள்விக்கு, சிருஷ்டிப்பின் வரிசையில் நான்காவது நாள் என்று தெரிந்துக்கொண்டோம். ஏன் என்ற கேள்விக்கு, மனிதர்கள் தேவனுக்கு பணியாற்ற உதவும்படியாக என்று கண்டோம். ஆகவே, நீங்கள் அடுத்த முறை இரவு நேரத்தில் வானத்தை நோக்கும் போது, நமக்காகப் படைத்த இவையெல்லா வற்றுக்காவும், தேவனுக்கு நன்றி சொல்ல மறவாதேயுங்கள்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! தொடர்ந்து சந்திப்போம்.

தமிழில் R.ஏபில் ரோஜர் நாயகம் **(R.A.R.Nayagam)**

# வேதாகமக் கேள்வி - பதில்

**கேள்வி** ***மோசேயும், எலியாவும் மறுரூபமலையில் கிறிஸ்துவுடன் ஏன் காட்சியளித்தார்கள் ?***

**பதில்** இயேசு மறுரூபமானதின் நோக்கம் இன்றைக்கு மிக முக்கியம் வாய்ந்தாக இருக்கிறது. மோசே ''நியாயப்பிரமாணத்தின் '' ''பிரதிநிதியாகவும், எலியா ''தீர்க்கதரிசிகளின்'' பிரதிநிதியாகவும் தோன்றியிருந்தார்கள். தேவன், ''இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்,இவருக்குச் செவி கொடுங்கள்'' என்று சொன்னதினால் (மத்.17:5), புதிய பிரமாணத்திற்கு கீழ் வாழ்கிற நாம், மோசே, எலியா (பழைய ஏற்பாடு, அதாவது நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசனம்) போன்றவர்களுக்கு செவிக்கொடுத்து கீழ்ப்படிய அவசியமில்லை என்றும் மாறாக தேவனுடைய நேச குமாரானகிய இயேசு கிறிஸ்துவுக்கு செவிகொடுத்து கீழப்படிய வேண்டும் என்றும் திட்டவட்டமாக சொல்கிறார். பழைய ஏற்பாடு (மோசே, எலியா ஆகியோர் பிரதிநிதித்து வப்பட்டது) கிறிஸ்துவின் மரணத்தினால் முடிவுற்று, நடுவிலிராதபடி எடுத்துப் போடப்பட்டது (கொலோ.2:14).

**கேள்வி** ***யோசேப்பு எங்கே அடக்கம் செய்யப்பட்டான்?***

**பதில்** யோசேப்பு 110 வயது சென்று மரித்தான். அவனுடைய உடலுக்கு சுகந்தவர்க்கமிட்டு, எகிப்து தேசத்தில் ஒரு பெட்டியிலே வைத்தார்கள். (ஆதி.50:26) ஆதி.50:24,25-ல் தேவன் இஸ்ரவேலர்களைச் சந்தித்து முற்பிதாக்களுக்கு வாக்குக் கொடுத்த தேசத்திற்கு அவர்களை நிச்சயம் கொண்டு போவார், அப்படிக் கொண்டு போகும்போது என் எலும்புகளை எடுத்துச் செல்லுங்கள் என்று யோசேப்பு கட்டளையிட்டான் என்பதை நாம் அறிவோம். மோசே இதை நிறைவேற்றினார் (யாத்.13:19).யோசுவா. 24:32-ல் யோசேப்பின் எலும்புகளை சீகேமிலே அடக்கம் செய்தார்கள் என்று காண்கிறோம்.

***கேள்வி பாவம் என்றால் என்ன?***

**பதில்** நியாயப்பிரமாணத்தை மீறுவது பாவம் (1.யோவான் 3:4) அநீதியெல்லாம் பாவம் (1.யோவா.5:17) நன்மை செய்ய அறிந்திருந்தும் செய்யாமலிருப்பது பாவம் (யாக்.4:17). விசுவாசத்தினால் வராததெல்லாம் பாவம்(ரோமர்.14:23)

பாவம் என்பது, தேவன் செய்ய வேண்டாம் என்ற ஒரு காரியத்தை செய்வது அல்லது தேவன் செய்ய வேண்டும் என்ற ஒரு காரியத்தை செய்யாமல் இருப்பது ஆகும்.

பாவம், ஆவிக்குரிய மரணத்தை உண்டுப்பண்ணுகிறது (எபே.2:1) அது தேவனிடத்திலிருந்து பிரிவதாகும் (ஏசாயா 59:1,2), ஒரு பாவி மீண்டும் தேவனோடு ஒப்புரவாகுவதற்கு பாவம் அவனிடமிருந்து அகற்றப்படவேண்டும் (2.கொரி.5:20) நம்முடைய பாவம் கழுவப்படும்படியாகவே கிறிஸ்து தன் இரத்தத்தைச் சிந்தினார். (வெளி.1:5) அவருடைய இரத்தத்தில் நாம் கழுவப்பட என்ன செய்யவேண்டுமென்று அநேக வேத வசனங்கள் நமக்கு எடுத்துரைக்கிறது (மாற்கு 16:16;அப்.2:38; அப்.22:16;1.பேதுரு.3:21)

**கேள்வி** ***அப்போஸ்தலன் என்று அழைக்கப்பட்ட பர்னபாவின் இயற்பெயர் என்ன?***

**பதில்** பவுலும், மற்ற 12 அப்போஸ்தலரை போலவும் பர்னபா ஒரு அப்போஸ்தலன் அல்ல, அப்போஸ்தலன் என்ற வார்த்தைக்கு ''அனுப்பப்பட்டவன்'' என்று பொருள்படும். இந்த அர்த்தத்தில் தான் அப்.14:14-ல் பர்னபா அப்போஸ்தலன் என்று அழைக்கப்படுகிறார். அப்.4:36-ல் ஆறுதலின் மகன் என்று அர்த்தம் கொள்ளும் பர்னபா என்றும் மறுபேர்பெற்றவனுமாகிய யோசே என்று இவன் அடையாளம் காட்டப்படுகிறான்.

**கேள்வி** ***வேதாகமம் எவ்வளவு பழமை வாய்ந்தது?***

**பதில்** பழைய ஏற்பாடு எழுதுவடிவில் வந்து சுமார் 3500 ஆண்டுகள் ஆகிறது.

புதிய ஏற்பாடு எழுத்துவடிவில் வந்து சுமார் 2000 ஆண்டுகள் ஆகிறது.

**''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்...''** எபி.11:6

**'' ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்''.** ரோமர் 10:17

# வெளிப்படுத்தின விசேஷம்

***அதிகாரம்: 13:1-10***

வெளிப்படுத்தின விசேஷ நூலின் மிகக் கடினமான அதிகாரங்களின் வரிசையில் முதல் இடம் வகிக்கத் தகுதியானது 13-ம் அதிகாரம். அதுமாத்திரமல்ல, இந்நூலில், மிகத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிற அதிகாரங்களில் முதன்மையானதும் இதுதான். உதாரணமாக, மிருகத்தின் இலக்கமாகிய 666, வேதாகமத்தில் எங்கிருக்கிறதென்று தெரியாவிட்டாலும் கிட்டத்தட்ட எல்லோருமே இந்த எண் பற்றி கேள்விப்பட்டிருப்பர். இந்த எண்ணுக்கு ஆளாளுக்குச் சொல்லும் கொடுமையான விளக்கங்களும், கருத்துக் களும் அநேகம் உண்டு ஆகவே, இந்த அதிகாரத்தை மிகுந்த கவனத் தோடும், எச்சரிப்போடும் அணுக வேண்டியது மிக அவசியம்.

முதலாம் வசனத்தில் தன்னுடைய தரிசனத்தில் யோவான் கடற்கரை மணலின் மேல் நின்றார். "அப்பொழுது அவன் சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டான். அதற்கு ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளும், இருந்தன. அதின் கொம்புகளின் மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின் மேல் தூஷணமான நாமமும் இருந்தன" இந்த மிருகத்தின் ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும், நமக்கு வெளி 12:30ல் நாம் பார்த்த ஏழு தலைகளும், பத்துக்கொம்புகளையுமுடைய வலுசர்ப்பத்தைக் காட்டுவதாக உள்ளது. அந்த வலுசர்ப்பம் சாத்தான் (12:9) ஒரு வித்தியாசம் யாதெனில், சாத்தான் தன்னுடைய ஏழு தலைகளின் மேல் ஏழு கொம்புகளையுடையதாயிருக்கிறதென்று விவரிக்கப் பட்டுள்ளது. (12:3) ஆனால், கடற்கரையிலிருந்து வந்த மிருகத்திற்கு பத்துக் கொம்புகளின் மேல் பத்து முடிகள் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.(13:1). தலைவனாயிருக்ககூடிய நிலை அதிகாரம் செலுத்தவும், பகிர்ந்தளிக்கவும் கூடியது, வலுசர்ப்பத்துக்கும், மிருகத்திற்கும் உள்ள இந்த வேறுபாடு சாத்தானுக்கு கீழ்ப்பட்டு பணி செய்கிற காரியத்தில், மிருகத்திற்கிருக்கக்கூடிய மகத்தான அதிகாரத்தின் அடையாளமாக இருக்ககூடும்.

வெளிப்படுத்தல் 12-ம் அதிகாரத்தில், ஏழுதலைகளென்பது, மனிதர்களின் ஆத்துமாக்களின் மீது சாத்தானுக்கிருக்கும் முழு அதிகாரத்தை எடுத்துச் சொல்கிறதென்று பார்த்தோம். (1.யோ:5:19யும் பாருங்கள்) கொம்புகள் வல்லமையை அடையாளப்படுத்துகிறபடியால், துன்மார்க்கர்கள் உட்பட்ட அவனுடைய ராஜ்யத்தின் மீது மகத்தான வல்லமை சாத்தானுக்குக் கண்டிப்பாக உண்டு. (2.தீமோ.2:26) சாத்தானின் அதிகாரமும் வல்லமையும்,13ம் அதிகாரத்தில்

சொல்லப்பட்டுள்ள இந்த மிருகத்திடம் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. அந்த உண்மையானது, (வெளி13:2) வலியுறுத்தப்பட்டுள்ளது.அங்கே வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும், மிகுந்த அதிகாரத்தையும் அதற்கு கொடுத்தது என்றுள்ளது. ஆகவேதான் தன் தலைகளின் மேல் தூஷணமான நாமத்தைக் கொண்டிருந்தது. (வெளி.13:1)வசனம் 2-ம் அந்த மிருகமானது " சிறுத்தையைப் போலிருந்தது அதின் கால்கள் கரடியின் கால்களைப் போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருந்தன" என்று சொல்கிறது. சிறுத்தையானது மிகவும் வேகமும் சுறுசுறுப்பும் கொண்டது எப்பொழுதும் இறைக்காக பதுங்கி அலைந்துகொண்டிருக்கும். கரடியின் கால்களில் பெரிய நகங்கள் இருக்கும், மற்றவர்களைத் தாக்குவதற்கு அவைகளைப் பயன்படுத்தும் சிங்கத்தின் வாய் ஆக்ரோஷமாக கர்ஜிக்கும் அது தன் இரையை பட்சிக்கும். ஆகையால் இந்த மிருகமானது வல்லமையும் கொடுமையுமுள்ளதாய் சாத்தானின் வழிகாட்டுதலின்படி தூஷணமான நாமத்தைக் கொண்டு மற்றதைத் தாக்கி விழுங்கும்படி வேட்டையாடுகிறதாகக் காட்டப்பட்டுள்ளது.

முதலாவது மிருகம் தன்னுடைய அதிகாரத்தையும், சிங்காசனத்தையும், மிகுந்த அதிகாரத்தையும் வலுசர்ப்பத்திடமிருந்து பெற்றுக்கொள்கிறதென்று சொல்கிறபடியால் சிலர் (குறிப்பாக யெகோவா சாட்சிக்காரர்கள்) தவறான எண்ணங்கொண்டு இதன் பொருள், எல்லா அரசாங்க அதிகாரமும் பிசாசிடமிருந்து வருகிறதென்று பொய்யாகப் போதிக்கின்றனர். இந்தக் கொள்கை மிகவும தவறானது. ஏனெனில் எல்லா அரசாங்கத்தின் அதிகாரமும், தேவனிடமிருந்துதான், பிசாசிடமிருந்தல்ல என்று வேதவசனங்கள் போதிக்கிறது (மத்.28:18)தேவன் தான், மனுஷனுடைய ராஜ்யங்களில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுக்கிறார் (தானி.4:17,25,26,32,5:21) எல்லா அரசாங்கங்களின் அதிகாரமும் தேவனிடத்திலிருந்து வருகிறது.(ரோமர் 13:1-7) இயேசுவானவர், பிலாத்திடம், அவனுக்கு அதிகாரம் கொடுத்தவர் தேவன்தான் என்று சொல்லுகிறார் (யோவா.19:10,11) ஆகவேதான் கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிற வர்களைத் தண்டிப்பேன் என்று தேவன் கூறுகிறார். (2.பேது.2:10) தேவனுக்கு நாம் நம்மைக் கீழ்ப்படுத்துகிற வழிகளில் ஒன்று நம்மை அரசாங்கத்திற்கு கீழ்ப்படுத்து வதாகும்.(1.பேது.2:13-15: தீத்.3:1) ஆகையால், இந்த மிருகத்திற்கு சாத்தானாலே கொடுக்கப்பட்ட வல்லமை, சிங்காசனம், அதிகாரம் போன்றவை அரசாங்க அதிகாரமல்ல. மாறாக தேவனுடைய அனுமதியின்படி, சாத்தானின் கரங்களில் தீமை செய்யும்படியாகக் கொடுக்கப்பட்டுள்ளது (யோபு.1:2; 1.கொரி.10:13) தனக்கு விருப்பத்தோடு பணிசெய்கிற அநேகரை சாத்தான் தன்வசம் வைத்துக்கொண்டு, தன் உபாயங்களின்படி செய்கிறான் (லூக்.4:6;அப்.26:18,2. கொரி.2:11) ஆகையால் தீமை செய்யும்படி முதலாவது மிருகத்திற்கு சாத்தானாலே அதிகாரமும், வல்லமையும் இடமும், கொடுக்கப்பட்டது. இந்த உண்மையானது

மிருகத்தின் தூஷணம் மற்றும் துன்புறுத்தும் வேலைகளினாலே கண்டிப்பாக விவரிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வேலை, அரசாங்கத்தாலும், பூமியிலே ஆளுகை செய்கிறவர்களாலும் சில நேரங்களில் செய்யப்படலாம். தேவனாலே அதிகாரம் கொடுக்கப்பட்டவர்கள், அந்த அதிகாரத்தை சாத்தானுடைய வேலைகளைச் செய்யும்படியாகத் தவறாகப் பயன்படுத்துவது உண்மை. இதற்கு, வெளிப்படுத்தல் எழுதப்பட்ட காலத்தில் ரோம அரசாங்கம் (டொமிசியன் சக்கரவர்த்தியின் கீழாக) ஒரு நல்ல உதாரணம். அதற்கு பல ஆண்டுகள் முன்பாக, நீரோ மன்னனால், ரோமபுரியில் கடுமையான துன்புறுத்துதல் நிறைவேற்றப்பட்ட கால கட்டத்தில் ரோமர் நிருபம் எழுதப்பட்டது. அப்பொழுது அங்கிருந்த கிறிஸ்தவர்கள் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று எச்சரிக்கப் பட்டார்கள். (ரோம.13:1-7) ஒரு கிறிஸ்தவன் தேவனுக்குக் கீழ்ப்படியக் கூடாதென்று கட்டளையிடப்பட்டலொழிய அவன் அரசாங்கத்திற்கு கீழ்ப்படி வதிலே தவறிழைக்கக் கூடாது. (தானி.5-6; அப்: 5:29).

மூன்றாம் வசனத்தில் சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகத்தை யோவான் பார்த்துக் கொண்டிருக்கையில், ''அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன். ஆனாலும்,சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தை பின்பற்றினார்கள்''. பிசாசின் கையாளான அந்த மிருகத்தின் மீது, என்ன காயம் ஏற்படுத்தப்பட்டிருந்தது? ''மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படி'' (எபி.2:14) இயேசு வானவர் பூமிக்கு வந்து மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். தன்னுடைய உயிர்த்தெழுதலினாலே,சரீர மரணத்தை மாத்திரம் அவர் வெற்றி கொள்ளாமல் (ரோமர் 6:9;1கொரி.15:54-57;2.கொரி.5:4) சிலுவை மரணத்தின் மூலமாக, ஆவிக்குரிய மரணத்திலிருந்து, அதாவது மனிதர் மீதான சாத்தானின் வல்லமையிலிருந்து, விடுவித்துக்கொள்ளும்படியான வழியையும் ஏற்படுத்தி யுள்ளார். (யோவா.1:29;3:16;6:33;ரோமர் 5:6-19; 2.கொரி.5:14;2 .தீமோ.1:10; 1.யோவா.2:2) '' பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்'' (1.யோவான். 3:8) சாத்தானுடைய கிரியைகளுக்கு, கிறிஸ்துவினாலே மரணத்துக்கான காயம் ஏற்படுத்தப்பட்டி ருந்தும் அவன் இன்னும் மனிதர்களை வஞ்சித்துப் பட்சிக்கும் வேலையைச் செய்து கொண்டுள்ளான் 1.பேதுரு. 5:8; வெளி.2:9) ஆகவேதான், சாத்தானுடைய கருவியாயிருக்கிற இந்த மிருகத்தை ''பூமியிலுள்ள யாவரும்'' ஆச்சரியத்தோடே பின்பற்றுகின்றனர் ஆச்சரியப்படுவதோடு மாத்திரமல்ல உலகமானது''. அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங் கினார்கள். அல்லாமலும் மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? என்று சொல்லி மிருகத் தையும் வணங்கினார்கள். அதினோடே யுத்தம் பண்ணத்தக்கவன் யார்? (13:4) சாத்தானுடைய உபாயங்கள் மனிதர்களுக்கு கவர்ச்சிகரமானதாயும் வல்லமையுல் லதாயுமிருக்கிறது. உலகமானது அந்த மாய வலையில் சிக்கிக் கொள்கிறது.

இந்த மிருகத்தைக் கொண்டு, சாத்தான், தேவனையும், அவருடைய நாமத்தையும் (அதிகாரத்தையும்) அவருடைய வாசஸ்தலத்தையும் (இது சபையைக் குறிக்கிறதாக இருக்கக்கூடும்) அப்.15:14-17, அல்லது தேவனுடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தைத்தானே (வெளி.15:5) குறிக்கக்கூடும் பரலோகத்தில் வாசம் செய்கிறவர்களையும் தூஷித்தான் (13:6) தேவனும் தேவனுடையவைகளும், பரலோகத்திலும், பூமியிலுள்ள அவருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களும் இந்த தூஷணத்திற்கு உட்படுத்தப்பட்டிருக் கிறார்கள். ஆனால் சாத்தான் கிறிஸ்தவர்களுக்கெதிராக " வார்த்தைகளுக்கும் மேலானவைகளை உபயோகிக்கிறான் மேலும் அவனுக்கு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப் பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும், பாஷைக்காரர் மேலும், ஜாதிகள் மேலும், அதிகாரங்கொடுக்கப்பட்டது (13:7). தேவனுடைய பிள்ளைகள் மீது பெரும் துன்புறுத்துதல்களை சாத்தான் கொண்டு வருகிறான். 12ம் அதிகாரத்தின் முடிவிலே நாம் கண்டது போல தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளு கிறவர்கள் மீது யுத்தம் செய்கிறான். (12:17) இந்த வெளிப்படுத்தல் புத்தகமானது, சாத்தான் உலகமனைத்திலுமுள்ள கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களுடைய சரீரங்களை வெற்றிகரமாக அழித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில் எழுதப்பட்டதென்பதை நினைவு கூறுகிறோம். ஆனால், அவன் வல்லமை ஒரு எல்லைக்குள்ளிலிருந்தது. அந்த மிருகத்திற்கு 42 மாதங்களுக்கு அதிகாரமிருந்தது (13:5) 42 மாதங்களென்பது $3^{1/2}$ ஆண்டுகளுக்கு சமம். இது சரியாக ஏழில் பாதி. ஏழு என்பது முழுமையின் அடையாளமாயிருக்கிறபடியால் $3^{1/2}$ என்பது முழுமைக்குறைவுக்கு அடையாளமாகிறது. ஆகையால் தீமை செய்யும்படியான மிருகத்தினுடைய வல்லமை முழுமையற்ற ஒரு காலத்திற்கு (அதாவது தற்காலிகமாகவே) இருக்கும். மிருகமானது முடிவிலே வெற்றி பெறாது. ஆனால் தேவன் பெறுவார் தேவனுடைய முழுக்கட்டுப்பாட்டின் கீழாக சாத்தான் இருக்கிறான். (யோபு.1:6 - 2:6 2.கொரி.10:13, எபே.6:10-18; 1.யோவா.4:4; 5:4,5). நம்முடைய சரீரத்தை மாத்திரம் அழிக்க வல்லவர்களுக்கு நாம் பயப்படக்கூடாது என்றும், மாறாக நம்முடைய சரீரம் ஆத்துமா, இவைகளின் மீது அதிகாரமுள்ளவருக்குப் பயப்பட வேண்டுமென்று தேவன் நம்மை எச்சரிக்கிறார். (மத்.10:28; லூக்.12:4,5).

வசனம் 8 "உலகத் தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவ புத்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்" என்று சொல்லுகிறது. இயேசு கிறிஸ்து எல்லா மனிதர்காகவும் மரித்தார் உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே தேவன், கிறிஸ்துவின் முதலாம் வருகை சபை ஸ்தாபிக்கபடுதல், சுவிசேஷம் அறிவித்தல், நித்திய இரட்சிப்பு,

ஆகிய பொதுவான திட்டங்கள் (குறிப்பிட்டவர்களுக்கு மாத்திரம் இரட்சிப்பென்றல்ல) தேவனிடமிருந்து.(மத்.13:34,35;25:34; ரோம.16:25;1. கொரி.2:7எபே. 1:3-6; 1.தீமோ.9,10; தீத்.1:2,3; 1.பேது.1:18-21). ஆட்டுக்குட்டியின் இரத்தத்திலே விசுவாசமுள்ளவர்களாயிருக்கிறபடியால் (ரோம.3:25) விசுவாசமுள்ள கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களின் பெயர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் இடம் பெறும் (எபி.12:23; வெளி:3:5; 20:15;21:27) இப்படி இடம் பெற்றிருப்பது சாத்தான் நம்மை எப்படித் துன்புறுத்தினாலும் அதை எதிர்ப்பதற்கு இது போதுமானதாக இருக்கிறதென்று காட்டுகிறது முதலாவது மிருகம். சரீரப்பிரகாமமாகத்தான் பரிசுத்தவான்களை மேற்கொள்ள முடிந்தது. (வெளி.11:7ப் பார்க்க) ஆனால், ஆவிக்குரிய ரீதியில், சாத்தானையும். அவன் உபாய தந்திரங்களையும் மேற்கொண்டார்கள் (12:11)வேறு வகையில் அல்ல இந்தச் செய்தியானது துன்புறும் எல்லாக்கிறிஸ்தவர்களையும், ஊக்கப்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

இப்பொழுது முதலாவது மிருகம் எது? என்ற கேள்வி வருகிறது. அந்த மிருகம் எதுவென்று துல்லியமாக அடையாளப்படுத்தப்படவில்லை. ஆனால் அது சாத்தானுடைய முக்கியமான கருவியென்று நமக்குத் தெரியும். இன்னும் அந்த மிருகம் சபைக்கெதிரான தூஷனம் மற்றும் துன்புறுத்தலுக்கு காரணமாக இருக்கிறதென்பதும் நமக்குத் தெரியும். எதிர்க்கப்படக்கூடாத இதன் வல்லமையைக் கண்டு உலகமனைத்தும் ஆச்சரியப்படுகிறது. சில நல்ல சகோதரர்கள் இது ரோம அரசாங்கத்தை குறிப்பாகக் குறிக்கிறதென்று நம்புகின்றனர். வேறுசிலர் இது உலகத்தையோ அல்லது கிறிஸ்தவர்களைப் பொதுவாகத் துன்புத்துவதைக் குறிக்கிறது என்று நம்புகின்றனர். ஆனால், மிருகத்தின் காயம் என்பது என்ன? கிறிஸ்துவின் மரணம், ரோம சாம்ராஜ்யத்தை கிறிஸ்தவத்திற்கு மாற்றும்படியான விதையை விதைத்தது. (தானி.2:31-45;ஏசா.2:1-4; அப்.23:11; 28:30,31;ரோமர் 1:15; பிலிப்.4:22). கிறிஸ்து உலகமனைத்தையும் ஒட்டுமொத்தமாக மேற்கொண்டார். (யோவ.16:33 ;1யோவா.5:4,5;வெளி.3:21) ஆகையால், குறிப்பாக ரோம அரசாங்கமோ அல்லது உலகமோ அல்லது துன்புறுத்தும் எந்தச் சக்தியோ இந்த முதலாம் மிருகத்தின் விவரிப்புக்குப் பொருத்தமானதாக இருக்கலாம். எப்படியிருப்பினும், எபே.6:11,12-ல் இந்த முதலாம் மிருகத்தோடு சம்பந்தப்பட்ட சாத்தானின் உபாய தந்திரங்களை எதிர்ப்பதற்குத் தேவையான, பிரயோஜனமான அறிவுரைகளைப் பார்க்கிறோம். "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின்

சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு'' அதைப் போலவே 2. கொரி 10:3-5 ''நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும் மாம்சத்தின்படி போர்செய்கிற வர்களல்ல எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல் அரண்களை நிர்மூலமாக்கிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்படியச் சிறைப்படுத்து கிறவர்களாயிருக்கிறோம்.

வெளி. 13:9,10-ல் '' காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன் சிறைப்படுத்திக் கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான். பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்படவேண்டும் பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும்'' என்று கர்த்தர் சொல்லுகிறார்.சாத்தானும் அவனுடைய எல்லா ஆட்களும் எதை விதைத்தார்களோ அதை அறுக்கப் போகிறார்கள். (கலா.6:7)சாத்தானும்; இந்த மிருகமும் (13-ம் அதிகாரத்திலுள்ள கள்ளத்தீர்க்கதரிசியாகிய இரண்டாம் மிருகமும்) கிறிஸ்தவர்களுக்கெதிராக தங்கள் யுத்தத்தில் தோற்றுப்போய் நரகத்தில், நித்திய காலமாக அடிமைப்படுத்தப்பட்டு,நித்திய மரணத்தில் பங்குள்ளவர்களாவார்கள் (வெளி. 19:19; 21; 20;10; மத்.25:41) நாம் யாவரும் இக்கருத்தைக் கேட்டுப் புரிந்து கொள்வது அவசியம். இதில் பாடம் என்னவென்றால், சாத்தானும் அவனுக்குச் சேவை செய்பவர்களும் ஏதாவது ஒரு கட்டத்தில், தேவனுடைய பழிவாங்குதலின் பலனை அறுவடை செய்தாக வேண்டும் (2.தெச.1:7-10) தேவனுடைய பரிசுத்தவான்கள் இதை நம்புகிறார்கள். ஆகவே பிசாசிடமிருந்தும், முதலாம் மிருகம் போன்ற அவனுடைய ஏவலாட்களிடமிருந்தும், வருகின்ற எல்லா தூஷணங்களையும், துன்புறுத்தல் களையும், சோதனைகளையும் சகிக்கிறார்கள். ஆகவே தான் கர்த்தர் சொல்லுகிறார் உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள்'' (லூக்கா.21:19) ''நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்'' (1.யோவான்.5:4).

**Jon Macon** **EZSR**



# சேர்த்து வைத்து காணிக்கை செலுத்தும்படி சபைக்கு வசனம் வழிகாட்டுகிறது.

கிறிஸ்துவின் சபையோர் காணிக்கை கொடுக்கும் விஷயத்திலும் புதிய ஏற்பாட்டின் மாதிரிக்குத் திரும்ப வகை தேடுகிறது. எதைச் செய்தாலும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலே செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதால், நாம் அவர் காட்டும் வழியில் செயல்பட வேண்டும். நாம் ஒன்றையும் வசனத்தோடு கூட்டவோ குறைக்கவோ கூடாது (ஒப்பிடுக வெளி.22:18,19) எனவே நமக்குக் கிடைக்கும் பொருளாதாரக் காரியங்களை என்ன செய்ய வேண்டும் என இயேசு வழி காட்டுகிறார் எனக் காண்போமாக.

## கொடுப்பதின் நோக்கம்

கொரிந்து பட்டணத்திலிருந்த தேவனுடைய சபை(2 கொரிந்தியர் 1:1) கொடுப்பது குறித்து மனதிலே நியமனம் செய்யும்படிக் கூறப்பட்டனர் (2.கொரிந்தியர் 9:7) ''தன் மனதில் நியமித்தபடியே'' என்று இங்கு கூறப்படும் பதத்தை ஸ்ட்ராங்ஸ் ஒத்தவாக்கிய அகராதி மற்றும் பொருள் அகராதியில் பக்கம் 8:20-ல் சொல்லும் போது ***'' ஒருவர் மற்றெல்லா செலவுகளுக்கு முன் தனக்குள் இவ்வளவு கொடுக்க வேண்டும் என தெரிவு செய்து கொள்ளுதல்''*** அதாவது ***''கொடுக்க முற்படுதல்''*** என்று விளக்கமளிக்கிறது. எனவே மனதிலே நியமித்தல் என்பது எதை (எவ்வளவு) கொடுப்பது என முன் தீர்மானித்தலேயன்றி, திடீரென தோன்றும் காரியமானதல்ல.

''அவனவன் தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக்கடவன்'' (1.கொரி.16:2) பணக்காரர்கள் நடுத்தர வர்க்கத்தினர், ஏழைகள் அனைவருமே தங்கள் வருமானத்துக்குத் தக்க வகையில் எதையாகிலும் கொடுக்க வேண்டும் என்பது இயேசுவின் கட்டளை. ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவளும் தன்தன் பாரத்தை சுமக்க வேண்டும் (2.கொரி.8:13-16) இப்படித்தான் மாற்கு 12:41-44 ல் கூறப்படும் ஏழை விதவை சரியான அளவீட்டில் தனது பாரத்தின் மிகப்பெரிய பகுதியைச் சுமந்தாள், இயேசு அவளைப் புகழ்ந்தார்.

## உற்சாகத்தோடு கொடுத்தல்

காணிக்கை கொடுப்பவர்கள்,''விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன் உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்'' (2.கொரி.9:7) ''உற்சாகத்தோடு'' என்பது கிரேக்க வார்த்தையில் '' ஹிலாரோஸ்'' எனப்படும். அது மனதில் ஆயத்தமாக... சந்தோஷமாக... உற்சாகமாக...(ஆங்கில வார்த்தைப்படி பெருங்களிப்புடன்)... பிரகாசத்துடன் கொடுத்தல் என்று பொருள் (புதிய ஏற்பாட்டு வார்த்தைகளுக்கான பொருள் விளக்க அகராதி பாகம் I.A.D.பக்கம் 184)கிறிஸ்தவர்கள் கர்த்தருக்குக் கொடுப்பதில் வருத்தமல்ல மகிழ்ச்சியடைகிறார்கள். தாங்கள் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் ஆர்வமற்றவர்களாக அல்ல அவர்கள் மனமுவந்து கொடுப்பவர்கள்

## மனதின் நியமித்தபடியே

மனதில் நியமித்தபடியே கொடுக்க வேண்டும் என (2.கொரி.16:22) ஏவப்பட்ட தேவனுடைய வசனம் போதிக்கிறது (2.தீமோ.3:16,17) யாரிடத்தில் அதிகமாய் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்கப்படும் (லூக்12:48) அவரவருடைய சம்பள விகிதத்திற்குத் தக்கவாறு கொடுத்தாலும் மாறுபடும் ஒருவர் எவ்வளவு அதிகமாய் சம்பாதிக்கிறாரே அவ்வளவு அதிகமாய் கொடுக்கவேண்டும். உங்களுக்கு சம்பள உயர்வு (கள்) கிடைப்பதற்கு முன் உரிய முறையில் கொடுத்திருப்பீர்களானால், சம்பள உயர்வுக்குப் பிறகும் அதே தொகையை கொடுக்க இயலாது. ஒருவருடைய வரவுக்குத் தக்கதாகக் கொடுத்தல் என்பது ஒருவர் தான் பெறும் சம்பளத்தின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் என்று பொருள் வருடத்தின் ஐம்பத்திரண்டு வாரங்களுக்குப் பெறும் ஐம்பத்திரண்டு செக்குகளுக்கும் ஐம்பத்திரண்டு காணிக்கை செலுத்தப்பட்டிருக்கவேண்டும். ஐம்பத்தி ஒன்றோ அல்லது குறைவான எண்ணிக்கையுள்ள காணிக்கை செலுத்துதல் அல்ல ஐம்பத்திரண்டு வாரச் சம்பளத்திலும் காணிக்கை கொடுப்போர் வெகுசிலரே. இது தேவனை கொள்ளையடிப்பதாகும் (மல்3:8-10) கிறிஸ்தவர்கள் பெருக அறுக்க வேண்டுமாயின் பெருக விதைக்கவும் (கொடுக்கவும்) வேண்டும் (2.கொரி.9:6; லூக்.6:38;மத்.6:33) சிறுக விதைப்பவர்கள் (கொடுப்பவர்கள்) சிறுகவே அறுப்பார்கள் ரோமர் 12:8-ல் கொடுக்கிறவர்கள் வஞ்சனையில்லாமல் (உதாரத்துவமாக) கொடுக்க வேண்டும். தேவன் அங்கீகரிக்கும் வகையில் கொடுத்தவர்களுக்கு உதாரணம் தங்கள் திராணிக்கு மேல் கொடுத்த மக்கதோனியரும் (2.கொரி.8:1-4) ஏழை விதவையும் ஆவார்கள் (மாற்.12:41-44) தேவன் தமது ஒரே பேறான குமாரனைக் கொடுத்தார் (யோவான். 3:16) இயேசு அநேகருக்கு தமது ஜீவனை கிருபாதார பலியாகக் கொடுத்தார் (மாற்கு.10:45)

## வாரத்தின் முதல்நாள்

காணிக்கை செலுத்தும்படி பவுல் கலாத்தியர் மற்றும் கொரிந்து பட்டணங்களுக்கு செய்த திட்டம் "வாரத்தின் முதல் நாளிலாகும்" (1.கொரி.16:1,2) இப்படியாக "வாரத்தின் முதல் நாளில்" காணிக்கை கொடுப்பது என்பது, சிலர் செய்கிறபடியாக தினசரி கொடுப்பதையோ விருந்துகள் மூலம் அளிப்பதோ, அதிஷ்ட சீட்டு குலுக்கல் அறுப்பின் பண்டிகை என்று சொல்லி கொண்டு வருகிற பொருட்களை ஏலம் விடுவதோ, நண்பர்களிடம் நன்கொடை வாங்குவதோ வியாபாரம் நடத்துவதையோ குறிப்பதில்லை. ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் காணிக்கை செலுத்த வேண்டும் என்பதையும் (வேதத்திலிருந்து) அறிகிறோம்) வாரத்தின் முதல் நாள் என்பது ஒவ்வொரு வாரமும் வருகின்ற நாளாகும். இது அப்போஸ்தலர் 10:7-ல் கூறப்படுவதற்கு சமமானது அதாவது "வாரத்தின் முதல்நாள்" என்னும் பதம் ஒரே விதமான பொருளைக் கொண்டது. ஒரு வங்கியைச் சார்ந்த மேலாளர் மாதம் தோறும் எனக்குறிப்பிவதற்கு ஒப்பானது இந்தச் சொல், நாம் புரிந்து கொள்ளக் கூடும். உதாரணமாக அவர் " மாதத்தின் முதல்நாளிலே பணத்தைக் கட்ட வேண்டும்" என்று குறிப்பிட்டால் ஒவ்வொரு மாதத்தின் முதல்நாள் என அறிவோம். மேலும் ஆங்கிலத்தில் மொழியாக்கம்

செய்யப்பட்டபடி 1.கொரி.16:2-ல் வாரத்தின் எனும் வார்த்தைக்கு முன் "THE" எனும் துணைப்பெயர் சொல் கிரேக்க மொழியின் KATA (கட்டா) என்பதாகும். இதன் பொருள் பிற இடங்களில் "ஒவ்வொரு" என அர்த்தமாகும் (அப்.14:23) பெந்தகொஸ்தே நாளிலே மனமாற்றப்பட்டார்கள் "அந்நியோநிய ஐக்கியத்தில் தரிந்திருந்தார்கள்" என்பது கிரேக்க பதத்தில் "காணிக்கை" செலுத்தவதிலும் (KOINONIA- கோயினோனியா) என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. (ஒப்பிடுக அப்.2:42;ரோமர். 15:26).


## *"செய்யக்கூடாத சிலக்காரியங்கள்"*

நாம் இச்சிக்கக் கூடாதவர்கள் (கொலோ.3:5) மேலும் நாம் பூமியிலல்ல பரலோகத்திலே பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டியவர்கள் (மத்.6:19-21) மனுஷர்கள் காணும்படி நாம் கொடுக்கக்கூடாது அப்படிச்செய்தால் நாம் எவ்விதப் பலனையும் பெற்றுக்கொள்ள இயலாது (மத்.6:1-4) நாம் கட்டாயமாயுமாகவோ விசனமாகவோ கொடுக்கக் கூடாது (2.கொரி.9:6) நாம் சிறுக விதைக்கக் கூடாது (2.கொரி.9:7). மிச்சமீதி இருந்தால் கொடுத்தல் பழக்கமும் கூடாது. மாறாக நமது பிரயாசத்தின் முதற் பலனைச் செலுத்த வேண்டும் (மத்.6:33) நமது வரிகளை மொத்த வருமானத்தின் அடிப்படையில் கணக்கிட்டுச் செலுத்துகிறோம். இருந்தாலும் அநேகர் தங்களுடைய வருமானத்தில் வரிகள், வாடகை, உணவு போன்ற கழிவுகள் போக மிச்சமுள்ள பணத்தைக் கணக்கிட்டு தேவனுக்குக் கொடுத்தனர். இது ஒருவருடைய வரவுக்குத்தக்கதாக கொடுப்பதில்லை. இது நாம் சில வேளைகளில் பாடுகிற பாடலாகிய "இயேசுவுக்கே யாவற்றையும் ஒப்புவித்தேன்" என் பாடலுக்கே முரணான செயல்.

## *முடிவுரை*

"வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" (அப்.20:35) கொடுப்பது ஒரு கிருபை (2. கொரி.8:1-7) அது ஒருவருடைய அன்பை வெளிப்படுத்துகிறது (2.கொரி.8:8,9) கொடுக்க அறிந்திருந்தும் கொடாமல் போனால் பாவமாகும் (யாக்.4:17) தேவன் எதை திட்டமிட்டு வரையறுத்திருக் கிறாரோ அதிலே அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருப்போமாக, அதே வேளையில் அவருடைய வசனத்தோடு ஒன்றைக் கூட்டவோ குறைக்கவோ செய்யாமல் காத்துக்கொள்வோம். நோவாவைப் போல தேவன் காட்டியிருக்கிறபடி செய்வோமாக; நோவா "தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்து முடித்தான்" (ஆதி.6:22) இயேசுகிறிஸ்துவின் இரட்சிக்கிற சுவிசேஷம் (நற்செய்தி. ரோமர் 10:13,14) பாவத்தில் வீழ்ந்துள்ள அனைத்து தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட ஏதுவாக கொடுப்போமா(மாற்கு 16:15-16; மத்.28:19) இது இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு போதிக்கவும் ஏதுவாக்கும். (1.கொரி.14:12; மத்.28:20) நிராதரவற்றவர்கள் விடுதலை பெறுவார்கள் (கால.1:2;6:10)

தமிழில்:**E.A. ஆறுமுகம்.**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***
***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

**Designed by : Aarthi Computers,** 811-Brough Road, Erode-1. Ph : 260971

REGISTERED NEWS PAPER RNI No. 47661 / 87 - NEW DELI

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்

கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701. தமிழ்நாடு, இந்தியா.

Published by **Church of Christ, Kangayam.**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S.RAJANAYAGAM,**